# சத்தியமூர்த்தி



14280
10464
10464
(1944)

விவேக சிந்தாமணிப் பிரசுரம்

“மகாத்மா காந்தி உயிருள்ள பொழுதே இந்தியா சுதந்திரமடையவேண்டும். அதுவே என் அபிலாஷை”

—சத்தியமூர்த்தி



மகாமகோபாத்தியாய டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை-600090.

விவேக சிந்தாமணி
மைலாப்பூர், சென்னை.

விலை ரூ. 1-0-0

முதல் பதிப்பு,
மார்ச் 1944.

ஸ்ரீ முத்துரங்க முதலியார்
டாக்டர் சுப்பராயன்
ஸ்ரீ கே. பாஷ்யம்
கனம் எம். ஆர். ஜயகர்
ஸர். ஸி. பி.
ஸ்ரீ புலாபாய் தேசாய்
,, வி. ஸி. கோபாலரத்னம்
,, சங்கு சுப்பிரமணியம்
,, ராமரத்னம்
,, சுப்பிரமணிய அய்யர்
(சத்தியமூர்த்தி சகோதரர்)
,, எஸ். நடராஜன்
,, கெ. பி. ஸ்ரீரங்கன்

இவர்கள்
எழுதியிருக்கின்றனர்.

விவேக சிந்தாமணி பிரசுரங்கள்
நிர்வாக ஆசிரியர்:
எஸ். நடராஜன், பி. ஏ.

ஹிந்தி பிரசார பிரஸ்,
தியாகராயநகர், சென்னை.

'Sathyamurthi'—Edited by S. Natarajan and
V. R. Radhakrishnan.

# நாம்

‘விவேக சிந்தாமணி,’—ஆம்! பெயர் அறிமுகமாக எங்கேயோ கேட்டது போல்தான் இருக்கும். சுமார் 45 வருஷங்களுக்கு முன்பு தமிழ் நாட்டில் விளங்கிய பிரசித்தமான தமிழ் பத்திரிகையின் பெயர்தான் இது. இதன் ஆசிரியர் (காலம் சென்ற) ஸ்ரீ ஸி. வி. ஸ்வாமிநாதய்யர் அறிவைப் பரவுவதற்கான சங்கம் என்ற ஸ்தாபனம் ஒன்றை ஆரம்பித்து இப்பத்திரிகையின் மூலம் பொதுஜனங்களுக்காக உழைத்துவந்தார். அறிவைபுகட்டியே வந்தார் என்றே சொல்லலாம். அக்காலத்தில் இக்காலத்திலுள்ளது போல் புஸ்தகங்கள் இல்லை. வாரப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஒன்றும் இவ்வளவு கிடையாது. மக்களிடையே படிக்க வேண்டும், விஷயங்களைத் தெரிந்துக் கொள்ளவேண்டும் என்ற ஆவலும் இல்லவே இல்லை. அப்படியே

இருந்தாலும் மிகக் குறைவாகவே இருந்தது. ஸ்ரீ ஸி.வி. ஸ்வாமிநாதய்யர் பெருமுயற்சியுடன் உழைத்து அறிவை பரவச் செய்வதில் ஓரளவுக்கு வெற்றியும் பெற்றார். தன் உழைப்பின் பலன் நம்பிக்கை தருவதாக இருக்கவே 'விவேக சிந்தாமணி' பத்திரிகையில் வெளியான அரிய விஷயங்களையும், சிறந்த நாவல்களையும் தனித்தனி புத்தகங்களாக அச்சிட்டு குறைந்த விலைக்கு கிடைக்கும்படி ஏற்பாடு செய்தார். இப்பொழுது தமிழ் புஸ்தக உலகில் ஏற்பட்டிருக்கும் உன்னதமான நிலைமைக்கு பிள்ளையார் சுழி போட்டவர் ஸ்ரீ ஸ்வாமிநாதய்யர்தான். அவர் காலமான பிறகு அவர் விட்டுப்போன வேலைகளை அவருடைய குமாரர்களாகிய நாங்கள் முழுவதும் தொடர்ந்து நடத்த முடியாவிட்டாலும் 'கமலாம்பாள்' சரித்திரத்தை மட்டும் பிரசுரித்து வெளியிட்டுவந்தோம். இப்பொழுது அந்த வேலையை தொடர்ந்து நடத்துவதென்று உறுதி கொண்டே இத்துறையில் இறங்கியிருக்கிறோம். 'விவேக சிந்தாமணி'க்கு ஆதரவளித்த தமிழ் நாட்டினர் எங்களுக்கு ஊக்கத்தை அளித்து ஆதரவளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

சென்னை,
27-3-44.

இப்படிக்கு,
விவேக சிந்தாமணி
பிரசுரகர்த்தர்கள்.

**ARYA—*Artist***

Portrait Painter in oils and water colours and crayons.

# நமது வணக்கம்

சத்தியமூர்த்தி மறைந்து ஒரு வருஷமாகிவிட்டது. அவருடைய தேச சேவையைப்பற்றி ஒரு புஸ்தகம் கூடத் தமிழில் இதுவரை வெளிவராதது மிகவும் அதிசயமாகத்தான் இருக்கிறது. அவருடைய ஞாபக தினக் கொண்டாட்டத்தின் பொழுது இச்சிறிய புஸ்தகத்தை தமிழ் நாட்டிற்கு சமர்ப்பிக்கிறோம். ஆயிரம் பக்கங்களிலும் அவருடைய சேவையைப் பற்றி எழுதினாலும் போதாது. அறிவைச் பரவச் செய்வதற்காக 40 வருஷங்களுக்கு முன் தமிழ் நாட்டில் ஊழியம் செய்த 'விவேக சிந்தாமணி' பிரசுரத்திற்கு 'சத்தியமூர்த்தி' யின் மூலமாக புத்துயிர் அளிக்கிறோம்.

இப் புத்தகத்தில் சத்தியமூர்த்தியிடம் நெருங்கிப் பழகிய பலர், எந்தத் துறையில் அவருடன் அதிக பரிச்சயம் உண்டோ, அதைப்பற்றி எழுதியிருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் எங்களது வணக்கம். மற்றொரு மகிழ்ச்சிக்குரிய விஷயம் இப்புத்தகம் சத்திய மூர்த்திக்குப் பிரியமான ஹிந்தி பிரசார சபையின் அச்சுக்கூடத்தில் பிரசுரிக்கப் பட்டதே. அவர்களுக்கு நமது வணக்கம். சத்தியமூர்த்தியின் பிளாக்குகளை உதவிய ஆனந்தவிகடன், நாரதர், ஹனுமான் காரியாலயத்தினர்களுக்கும் அழகிய முகப்பு படத்தை தயாரித்துக் கொடுத்த 'ஆர்யா'வுக்கும் நமது நன்றி. சத்தியமூர்த்தியின் ஆவேச மொழிகளால் தூண்டப் பப்பட்டு விடுதலைப் போராட்டத்தில் வீரத்துடன் கலந்துகொண்டு சிறையில் அல்லற்படும் தேச பக்தர்களுக்கு இப்புத்தகத்தை அர்ப்பணம் செய்கிறோம்.

சத்தியமூர்த்திக்காக, அழியாத ஞாபகச் சின்னங்கள் பல ஏற்படுத்த வேண்டும். தமிழ் புஸ்தக உலகில் சத்தியமூர்த்திக்கு என்றும் அழியாத ஞாபகச் சின்னத்தை ஏற்படுத்தி விட்டோம் என்று பெருமை யடைகிறோம்.

சென்னை,
27-3-44.

விவேக சிந்தாமணி
பிரசுரகர்த்தர்கள்.

# எமது அடுத்த வெளியீடு

அரசியல் முட்டுக் கட்டையைத்

தீர்ப்பது பற்றி

தலைவர்

## முத்துரங்க முதலியார்

எழுதும் புஸ்தகம்

தேசிய வாரத்தின் பொழுது தமிழருக்கு

அன்பளிப்பு.

# சத்தியமூர்த்தி

## வாழ்க்கை குறிப்புகள்

**1887**ம் வருஷம் ஆகஸ்டு 19உ திருமயம் என்ற ஊரில் பிறந்தார்.

**1895**—தகப்பனார் ஸ்ரீ சுந்தர சாஸ்திரியார் பிரிவு.

**1906** பி. ஏ. பட்டம் பெற்றார்.

புதுக்கோட்டை ராஜா காலேஜ், சென்னை கிருஸ்து கலாசாலை லா காலேஜ் இவைகளில் படித்து பட்டம் பெற்றார்.

**1907** சென்னை கடற்கரையில் விபினசந்திரபாலர் பிரசங்கம் கேட்டு விதேசி துல்லாக்கை கொளுத்தியது.

**1908** சென்னை காங்கிரஸ் கூடிய பொழுது தொண்டர் படையில் சேவை செய்தார். தமிழில் முதன் முதலாக பொதுக்கூட்டத்தில் பேசியது இந்த வருஷத்தில்தான். மதுராந்தகத்தில் நடைபெற்ற கூட்டுறவு மகாநாடே அந்த பொதுக்கூட்டம்.

**1917** கல்கத்தா காங்கிரஸில் அச்சுச் சட்ட அடக்கு முறையைத் தாக்கி செய்த பிரசங்கம். இவருடைய முதல் பேரிய பிரசங்கம் இதுதான்.

**1917-18**ல் காஞ்சீபுரம் தமிழ் மாகாண மகாநாடு சரோஜினி தலைமையில் கூடியது. பெஸண்ட் கொள்கையை எதிர்த்து சத்தியமூர்த்தியின் பிரசங்கம். அரசியல் பிரவேசம்.

1919 லண்டனுக்கு சென்ற காங்கிரஸ் தூது கோஷ்டியில் ஒருவர்.

1920 தமிழ் ஜில்லாக்கள் ஒவ்வொன்றுக்கும் முக்கியமான கிராமங்கள் ஒவ்வொன்றிலும் காங்கிரஸ் பிரசாரம்.

1923 சென்னை சட்டசபையில் ஜஸ்டிஸ் மந்திரி சபை மீது ஸ்ரீ ஸி. ஆர். ரெட்டி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்தார்.

1925 இரண்டாம் முறையாக லண்டனுக்கு விஜயம். இங்கிலாந்தில் காங்கிரஸ் பிரசாரம்.

1926 கார்ப்பரேஷன் கௌன்ஸிலர்.

1929 சென்னை சர்வகலாசாலை கமிஷன் மெம்பர்.

1931 சத்தியாக்ரஹப் போர். முதன் முறை சிறை புகுந்தார்

1932 விடுதலை—மீண்டும் கைது.

1934 மத்ய சட்டசபை தேர்தல். சர் ராமஸ்வாமி முதலியாரை எதிர்த்து நின்று வெற்றிபெற்றார்.

1937 சென்னை அசெம்பிளிப் பொதுத் தேர்தல். ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியாரின் பொருட்டு தன் அபேட்சையை வாபஸ் பெற்றார்.

1939 சென்னை நகர மேயர் பதவி. பூண்டி திட்டத்தை தயாரித்து குடி நீர் வசதிக்கு ஏற்பாடு செய்தார்.

1942 ஆகஸ்டில் பம்பாய் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திலிருந்து திரும்புகையில் அரக்கோணம் ஸ்டேஷனில் கைது செய்யப்பட்டார்.

1943 மார்ச் மாதம் 28உ. இரவு 1 மணிக்கு சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் காலமானார்.

# விளையும் பயிர் முளையிலே

எஸ். சுப்பிரமணீய அய்யர், எம்.ஏ., எல்.டி.

[ஸ்ரீ சுப்ரமணிய அய்யர் ஸ்ரீ சத்திய மூர்த்தியின் சகோதரர்களில் ஒருவர். சத்திய மூர்த்தியின் ஜாடைகள் இவரிடத்தில் அதிகம் காணப்படுகிறது. இவர் இப்பொழுது மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூலில் போதகாசிரியராக இருக்கிறார்.]

தஞ்சாவூர் ஜில்லாவில் ஆவடையார் கோவில் என்று ஒரு சிவ க்ஷேத்திரம் இருக்கிறது. அதற்கு நான்கு மைலில் செம்மனும் பொட்டல் என்ற ஒரு சிறிய கிராமம். அவ்வூரில் துரைஸ்வாமி சாஸ்திரிகளின் ஜேஷ்ட குமாரனான சுந்தர சாஸ்திரிகளுக்கு ஸர்வஜித் வருஷம் ஆவணிமாதம் 4வ (17-8-1887) புத்திரனாகத் தோன்றியவர் சத்திய மூர்த்தி. இவர் பிறந்த இடம் புதுக்கோட்டை சமஸ்தானம். திருமயம் தாலுக்காவிலுள்ள திருமயம் என்கிற நகரம். அவ்வூர் பெருமாள் நாமமே சத்தியமூர்த்தி.

இவர் பிறந்த சிறிது காலத்திலேயே சுந்திர சாஸ்திரிகள் புதுக்கோட்டை சமஸ்தானம் குளத்தூர் தாலூகாவைச் சேர்ந்த கீரனூருக்குக் குடியேறினார். சாஸ்திரிகள் சம்ஸ்கிருதத்தில் மிகத் தேர்ச்சி யடைந்தவர், ஆத்மார்த்தமாக தனது கிருஹத்திலேயே கொட்டகை முதலிய வசதிக

ளேற்படுத்தி ஸ்ரீமத் ராமாயணம் முதலிய கிரந் தங்களை ஒவ்வோரிரவும் படித்து பிரவசனம் செய்வார். ஊரிலுள்ள கோவில் உத்ஸவாதி களுக்கு புதுக்கோட்டையிலிருந்து வேதப் பிராம் மணர்களை வரவழைத்து, ஸ்வாமி கிராம பிரதக்ஷி ணம் போகும் பொழுது கூடவே வேதாத்யய னங்கள் செய்வித்து அப் பிராமணர்களுக்கு வேண்டிய சௌகரியாதிகளை தன் கிரஹத்தி லேயே செய்து வந்தார்.

சாஸ்திரியார் சமஸ்தானத்தில் முக்தியார் பரீக்ஷை 'பாஸ்' செய்து ஒரு வக்கீலாக இருந்து வந்தார். புதுக்கோட்டை நகரிலுள்ள பிரபல வக்கீல்கள் சாஸ்திரிகளிடம் மிக்க அன்பும் ஆதர வும் உடையவர்களாக இருந்தார்கள். இங் கிலீஷ் பாஷை பேசிய பழக்கம் இவருக்கு இல் லாததினாலேயே தாங்கள் சோபித்துவருவதாக இதர வக்கீல்கள் சொல்வதுண்டு.

ஒரு முறை மாஜிஸ்திரேட்டிடம் ஒரு கட்சியை வாதாடும்பொழுது, "சாஸ்திரிகளே, கட்சிக்காரனுக்காக இவ்வளவு அதிகம் பேசக் கூடாது. உமது சன்னத்து ரத்து செய்யப்படும்" என்று மாஜிஸ்திரேட்டினால் பயமுறுத்தப்பட் டார் சாஸ்திரியார். 'உங்களால் ஆனதை பார்த் துக் கொள்ளலாம்' என்று சொல்லி சாஸ்திரிகள் சன்னதை இழந்தார்.

இதற்குப் பின் ஒரு வருஷத்திற்குள் சிவ கங்கை போய் அங்கு சில வியவகாரங்களைத் தீர்த்துவைத்து அதன் பலனாக ஏதோ பூமி சாஸனம் வாங்கி வந்தார். இந்த பூமி இவர் இறந்த 10 வருஷங்களுக்குப் பிறகு விற்கப்பட்டு சத்யமூர்த்தியின் படிப்பு பட்டணத்தில் நடக்க உபயோகப்பட்டது.

சத்தியமூர்த்திக்கு எட்டுவயது நடக்கும்பொழுது சாஸ்திரிகள் திடீரென இறந்தார். உயர் குலத்தில் பிறந்த சாஸ்திரிகளின் மனைவியாக வாழ்க்கைப்பட்ட சுப்புலக்ஷ்மி அம்மாள் தனது 32 வயதில் விதவையானார். சத்தியமூர்த்திதான் மூத்தபிள்ளை. அப்பொழுது உபநயனம் ஆகவில்லை. 1-வது பாரம் கூட படிக்கவில்லை.

சத்தியமூர்த்திக்கு மூன்று சகோதரர்களும் நான்கு சகோதரிகளும் உண்டு. இவர்களை ரக்ஷித்து பிள்ளைகளை படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டுவரும் பொறுப்பு பூராவும் எனது தாயார் சுப்புலக்ஷ்மியம்மாளுடையதாகவே இருந்தது. அந்தம்மாளுக்குகூடப் பிறந்தவர்கள் உண்டு. சுந்தர சாஸ்திரிகளுக்கும் சகோதர சகோதரிகள் இருக்கின்றனர். ஆனால் அவர்களால் இந்த குடும்பத்திற்கு உதவி கிடையாது.

என் தாயாரின் சிரமத்திற்கு எல்லையேயில்லை. தன்னிடமுள்ள நகைகள் எல்லாவற்றையும் விற்று பிள்ளைகளை படிக்கவைத்தார். சத்தியமூர்த்திக்கு பட்டினத்தில் போய் படிக்க ஆசை விழுந்தது. பணமில்லை. தைரியமாக பட்டினம் வந்தார். புதுக்கோட்டையில் தாயாரும் மற்றும் சகோதர சகோதரிகளும் எவ்வளவோ சிரமப்பட்டு இவரை பட்டினத்தில் படிக்கவைத்தார்கள்.

செம்மனம்பொட்டலிலுள்ள சொத்து வகையராக்கள் பாகம் செய்யப்பட்டு இவருடைய படிப்பிற்கு சிறிதளவு உதவியது.

புதுக் கோட்டையில் படிக்கும் பொழுதும், பட்டினத்தில் கிருஸ்துவ கலாசாலையில் படிக்கும் பொழுதும் இவருடைய பேச்சுத் திறமை பல

துறைகளிலும் விளங்கி வந்தது. எட்டு வயதிற்கு முன்பே பிதாவுடன் கூட சபைகளுக்குப் போய் இவர் பேசியதும் உண்டு. இங்கு பட்டினத்தில் படிக்கும்பொழுது வங்காளப் பிரிவினை காரணமாக ஏற்பட்ட கிளர்ச்சியின் பொழுது கிருஸ்துவ கலாசாலையில் முன்னின்று ஸ்டிரைக் முதலியவைகளை நடத்தியிருக்கிருர். படிப்பின் திறமைக்காக் பரிசுகளும் மெடல்களும் பெற்ருர்.

தனக்கு தாயிடமிருந்த அன்பு மிகுதியாலும், தாயார் தனக்குச் செய்த பேருதவிக்கு தன் நன்றியின் ஓர் அறிகுறியாகவும், தன் பிதா மகரிடத்தில் உள்ள பெரும் மதிப்பை விளக்கக் கூடியதாகவும் உள்ள ஒரு நிதியை ஸ்தாபித்து புதுக்கோட்டை காலேஜிலோ அல்லது சென்னை சர்வகலாசாலையிலோ தன் தாய்தந்தையர் இருவர் பெயரிலும், ஒரு பரிசோ, பதக்கமோ அளிக்க ஏற்பாடு செய்யக் கருதி யிருந்தார். அவரது வாழ் நாளில் அவ்வெண்ணம் நிறைவேறவில்லை.

இவரிடத்தில் தாய்க்கு இருந்த அன்பு சொல்ல முடியாது. தானும், தன்னுடைய மற்றைய குழந்தைகளும் இவருடைய சௌகரியத்திற்காக தங்கள் நலன்களைக்கூட துறக்க வேண்டு மென்பதே என் தாயின் கருத்து. இவருக்கும், தனது சகோதர சகோதரிகளிடம் இருந்த அன்பிற்கு எல்லையில்லை.

நமது குடும்பங்களில் மூத்த பிள்ளைகளுக்கு சில நற்குணங்கள் தனிச்சிறப்பாக அமைகின்றன. இவ்வுண்மையை இவருடைய வாழ்க்கையில் நன்கு காணலாம்.

தாய் மற்றுமுள்ள பந்துக்களிடமுள்ள அன்பினிடையே அவர்கள் எவரையும் லட்சியம்

செய்யாது தானாக தனக்குத் தோன்றியபடி காரியங்களைச் செய்வதுமுண்டு. புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு படிக்க வந்தது; தாயார் தடுத்தும் கேளாமல் 25-வது வயதில் கொழும்பிற்கு சுகுண விலாச சபை கோஷ்டியுடன் நாடகமாடச் சென்றது; 32 வயதில் சீமைக்குப் போனது முதலியவைகள் இவ்வித் காரியங்களிற் சில.

வக்கீல் தொழிலில் என்றுமே இவருக்கு அதிகப் பற்று உண்டென்று சொல்ல இடமில்லை. 21-வது வயதிலேயே சென்னையில் நடந்த அகில இந்திய காங்கிரஸுக்கு ஒரு வாலண்டியராக ஸ்ரீ வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் தலைமையில் தொண்டு செய்திருக்கிறார். அதுமுதல் ஒவ்வொரு காங்கிரஸிற்கும் தவறாமல் சென்றுவந்தார்.

காங்கிரஸ் நடவடிக்கை பிரசுரங்களில் இவர் செய்துள்ள பிரசங்கங்கள் பற்றி இன்றும் படிக்கலாம்.

சத்திய மூர்த்தியின் அரசியல் தொண்டு உலகம் அறிந்ததே. பால்யம்முதல் இவருடைய உறுதியான மனப்பான்மை, தகப்பனாரின் அஞ்சா நெஞ்சம், தனது பொறுப்பை நிறைவேற்ற உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்வது இவைகளுக்கெல்லாம் தாயினிடம் அடைந்த பயிற்சிகளே ஆதாரமாக அமைந்தன.

---

'சத்தியமூர்த்தி தனி நபரல்ல; ஒரு ஸ்தாபனம்.'

பம்பாய் கிரானிகள்.

---

சத்தியமூர்த்தி அல்லாடியிடம் படித்திருக்கிறார். சத்தியமூர்த்தி சரித்திர ஆசிரியராக இருந்தபொழுது அவரிடம் டாக்டர் சுப்பராயன் படித்திருக்கிறாராம்.

# கலைஞன் சத்தியமூர்த்தி

## ஸ்ரீ. வி. ஸி. கோபலரத்னம்

[பிரபல வக்கீலும், நாடகாசிரியரும் நடிகருமான ஸ்ரீ கோபலரத்னம் இக்கட்டுரையில் சத்தியமூர்த்தியின் கலைப்பண்பைப் பற்றி எழுதியிருக்கிறார். ஸ்ரீ கோபலரத்னமும் சத்தியமூர்த்தியும் நெருங்கிய தோழர்கள். ஸ்ரீ. வி. வி. சீனுவாஸய்யங்காரிடம் இருவரும் வக்கீல் தொழில் கற்றுக்கொண்டனர். சுகுணவிலாஸ சபையில் சேர்ந்து நடித்தனர்.]

இணையற்ற பிரசங்கி, முதல்தர அரசியல்வாதி, தனது கக்ஷிக்காக சலியாது ஊதியமற்று உழைப்பவர் என்பதில் மட்டும் சத்தியமூர்த்தியின் கீர்த்தி நிற்கவில்லை. பல துறைகளிலும் அவர் சிறந்து விளங்கினார். வக்கீலாக மட்டும் அவர் வேலைசெய்ய ஆரம்பித்திருந்தால் தம் மாகாணத்திலுள்ள சிறந்த வக்கீல்களில் ஒருவராக விளங்கியிருப்பார் என்பதில் ஐயமில்லை. அவர் சிறந்த கலைஞன் என்று அநேகருக்கு தெரிந்திராது. நாடகம் சங்கீதம் ஆகியத் துறைகளில் அவருடன் பழகியிருக்கும் பாக்கியத்தை நான் பெற்றிருந்தேன்.

சம்ஸ்கிருத பாஷையில் அவருக்கு அளவற்றப் பற்று. சம்ஸ்கிருத நாடகமோ அவரது கண்ணின் கருவிழி போன்றது.

தமிழ், சம்ஸ்கிருத, ஆங்கில நாடகங்களிலும்

அவர் மேடை மீது தோன்றி நடித்திருக்கிறார். 'வேணி சம்ஹாரம்' என்ற சம்ஸ்கிருத நாடகத்தில் அஸ்வத்தாமனாக அவர் வீரத்துடன் நடித்ததை எவரும் எளிதில் மறக்க முடியாது. தன் பூணூலை அறுத்துவிட்டு உக்கிராவேசத்துடன் அஸ்வத்தாமன் கர்ணனுடன் சபதம் செய்யும் கட்டத்தில் சத்தியமூர்த்தி நடித்ததை இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் மயிர்கூச்சல் எடுக்கிறது. இக் கஷ்டமான பாகத்தை சிறப்புடன் நடிக்க அவருடைய கம்பீரமான குரலும், தெளிவான உச்சரிப்பும் வித்வத்தும் சாதகமாயிருந்தன. பிரபல சம்ஸ்கிருத நாடகாசிரியர் சூத்ரகரின் 'மிருச்சகடிகா' (வசந்தசேனா) வில் விதூஷகன் மைத்திரேயனாக அவர் நடித்ததை அடுத்தபடியாகச் சொல்லலாம்.

சுகுணவிலாச சபையில் ஒரு நடிகராகவும், நடிகர்களை பழக்குபவராகவும் அவர் பெரும் பணி ஆற்றியிருக்கிறார். நல்ல சங்கீதத்தைக் கேட்க அவருக்கு மிகப் பிரியம். பாடுகிறவர்கள் சாஹியத்தின் பாவத்தை உணர்ந்து அக்ஷர சுத்தியுடன் பாடவேண்டுமென்று அவர் வற்புறுத்துவார். சங்கீத மும்மூர்த்திகளான தியாகய்யர், தீக்ஷதர், சாமா சாஸ்திரிகள் இவர்களுடைய கீர்த்தனங்களிலும் க்ஷேத்திரக்ஞர் போன்றவர்களின் பதங்களிலும் அவருக்கு மிகப்பற்று. இவைகளுடன் கூட கோபாலகிருஷ்ண பாரதி, அருணாசல கவி, சுப்ரமணிய பாரதி, பாபநாசம் சிவன் போன்றவர்களின் தமிழ் பாடல்களிலும் அவருக்கு அத்யந்த பிரேமை.

சங்கீத வித்வத் சமாஜத்தின் ஆரம்பகாலத்தில் மகாநாடுகளை ஏற்பாடு செய்வதிலும், ஒரு ஒழுங்கான முறையை அனுஷ்டிக்கச் செய்வதி

லும் பாடுபட்டிருக்கிறார். இந்த ஸ்தாபனத்தின் உபதலைவராகவும் இருந்து சேவை செய்திருக்கிறார். தனக்கு தோன்றியதை பிறர் என்னகுறை சொன்னபோதிலும் ஒளிமறைவு இன்றி அடித்துப்பேச அவர் என்றும் தவறியது கிடையாது.

பெண்களின் சாரீரம்தான் உணர்ச்சியைத் தரக்கூடிய நல்ல சங்கீதத்திற்கு லாயக்கானது என்பது அவர் கருத்து. ஆகையால் பாடகிகளுக்கு அதிக ஆதரவளிக்க வேண்டுமென்று சொல்வார்.

நடனக்கலை பலவருஷங்களுக்கு முன் புறக்கணிக்கப்பட்டு க்ஷீணதசையை அடைந்தபோது இக்கலைக்கு புத்துயிர் அளிக்கவும், கௌரவ குடும்ப பெண்களும் இதில் ஈடுபட வேண்டுமென்று மறு மலர்ச்சித் தொண்டில் ஊக்கம் கொண்டவர்களில் சத்தியமூர்த்தியும் ஒருவர்.

நாடகக்கலை சீர்திருத்தத்திற்காக அவர் மிகவும் பிரயாசைப்பட்டார். புராணம், இதிஹாஸங்களிலிருந்து மட்டும் நாடகங்களுக்கு கதை தயாரிப்பதை அவர் எப்பொழுதும் கண்டித்திருக்கிறார். இந்த சீர்திருத்தத்தில் அவருக்கு சில திடமான உறுதிவாய்ந்த கொள்கைகள் உண்டு. இவைகளை பயப்படாமல் கூறிவிடுவார். வாழ்க்கையில் தினம் சந்திக்கும் மனுஷ்யர்களின் குணபாவங்களை சித்தரிக்கும் சமூக நாடகங்களும், சரித்திர சம்பந்தமான நாடகங்களும் அதிகமாக நடிக்கப்படவேண்டும் என்பது அவருடைய விருப்பம். அவைகளில்தான் இயற்கையாக நடிக்கமுடியும் என்பதும் அவருடைய எண்ணம்.

தமிழ் நாட்டில் அதிகமாக எங்கும் நடைபெறும் 'வள்ளித்திருமண' நாடகத்தைப்பற்றி கூறி பரிகசிப்பார். "யானையைக் கொண்டு

காதல் கொள்ள செய்யும் விசித்திர கதையப்பா வள்ளித் திருமணம்" என்று சிரிப்பார். இதை நடிப்பதன் மூலம் அதில்வரும் தெய்வங்களுக் கெல்லாம் பெருத்த அபராதம் செய்கிறோம் என்று கூறுவார்.

ஆண்கள் பெண் வேடம் தரிப்பதையும் ஸ்திரீகள் புருஷ வேடம் பூணுவதையும் அவர் வண்மையாகக் கண்டித்திருக்கிறார். லலிதகலை அப்யஸிக்க சர்வகலாசாலை ஒன்று அவசியம் என்று என்னிடம் அவர் சில சமயம் கூறியதுண்டு. அப்பொழுதுதான் எல்லா கலைகளையும் சற்று ஆராய்ச்சி செய்து பரவவும் செய்ய இயலும் என்பதும் அம்மாதிரி சர்வ கலாசாலை ஸ்தாபிக்க எவ்வளவு செலவானாலும் பாதகமில்லை என்பதும் அவருடைய எண்ணம்.

'கொஞ்சம் கருணைகூட காட்டாமல் கலைகள் குழி தோண்டி புதைக்கப்பட வேண்டும். மனிதனின் சிறந்த உணர்சிகளைத் தூண்டக்கூடிய அழகிய கலைகள் மேன் மேலும் வளர்க்கப்பட வேண்டும். இவ்விருபெரும் காரியங்களை சாதிக்க எல்லா அதிகாரங்களையும் கொண்ட சர்வாதிகாரி இருந்தாலும் பரவாயில்லை' என்பது சந்திய மூர்த்தியின் சித்தாந்தம்.

சென்னையை சௌந்தரிய நகரமாக்கவேண்டுமென்று அவர் ஆசைப் பட்டார். அதை ஸ்மரித்துக் கொண்டே தான் உயிரையும் விட்டார். சென்னை நகரத்தின் அபிவிருத்திக்காக அவர் செய்த தொண்டு கணக்கற்றவை. அவருடைய ஞாபகம் என்றும் பசுமையாய் நீடித்து நிலைத்திருக்க அழகிய பூந்தோட்டத்தையும் சிறந்த ஞாபக சின்னம் ஒன்றையும் ஏற்படுத்த வேண்டியது நம் கடமை.

# காஞ்சீபுரம் கண்டெடுத்த சத்தியமூர்த்தி

**எஸ். நடராஜன்**

ஸ்ரீ சத்தியமூர்த்தியின் பிரசங்கம் என்ருலே அதற்காக கூடும் கூட்டம் கணக்கிட முடியாது. சத்தியமூர்த்தியின் பிரசங்கங்களை ஒன்றும் விடாமல் கேட்டு வந்தவர்கள் அநேகர். அவர்களில் ஒருவர் என் நண்பர். இவர் காஞ்சிபுரத்தில் 1918-ல் நடைபெற்ற மகாநாட்டில் சத்தியமூர்த்தி பிரசங்கத்தை கேட்டது முதல் அவர் பிரசங்கத்தை கேட்க தவறுவதில்லையாம். காஞ்சிபுரம் மகாநாட்டில்தான் சத்தியமூர்த்தியின் திறமையை, பேச்சு வன்மையை தமிழ்நாடு அறிந்தது. அம்மகாநாடு பற்றிய சில விவரங்களை நான் கேட்டதை அப்படியே இங்கு தருகிறேன்.

'மகாநாடு ஆடம்பரமாக ஆரம்பமாகி விட்டது. பிரசங்கம் செய்வதில் உலகிலேயே நிபுணரென்று பெயர் பெற்ற ஸ்ரீமதி பெஸண்ட் அம்மையார் அமர்ந்திருக்கிருர். ஸ்ரீமதி சரோஜினி தேவிதான் இம் மகாநாட்டின் தலைவர். அன்னி பெஸண்ட், சர். சி. பி. ராமஸ்வாமி அய்யர், அருண்டேல், வாடியா, கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியார், திவான் பகதூர் கேசவப்பிள்ளை ஆகியோர் மாண்டேகு சீர்திருத்தத்தை வரவேற்க வேண்டும்; யுத்தத்தில் பிரிட்டனுக்கு உதவி

செய்ய வேண்டும் என்ற பல்லவியுடன் தமிழ் நாட்டை மடக்கப் பார்த்தார்கள். ஆனால் இதை தோற்கடிக்கும் பொறுப்பு ஸ்ரீ சத்தியமூர்த்தியிடம் விடப்பட்டது. 'இங்கிலாந்து நமக்கு சுயராஜ்யம் கொடுத்து உதவாவிட்டால் நாம் யுத்தத்தில் உதவி செய்யக் கூடாது' என்று திருத்தப் பிரேரணை கொண்டுவந்து ஸ்ரீ சத்தியமூர்த்தி ஆவேசமாகப் பேசினர். இப் பிரசங்கம் ஸ்ரீமதி பெஸண்டின் வீழ்ச்சிக்கும் விழிப்புக்கும் பிரதம காரணமாக இருந்தது.

சத்தியமூர்த்திக்கு முதன் முதலாக ராஜியத் துறையில் நண்பர்களானவர்கள் ஸ்ரீ ஜி. ஏ. நடேசனும், மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியாரும் தான். அப்பொழுது ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் ஒரு பெரும் மிதவாதத் தலைவராக இருந்தார். 1907-ல் ஸ்ரீ விபினசந்திர பாலரின் தேச பக்தி நிறைந்த பிரசங்கத்தை ஸ்ரீ சத்தியமூர்த்தி கேட்டிராமலிருந்தால் ஒரு பெரும் மித வாதத் தலைவராகவே ஆகியிருப்பார்.

லாலா லஜபதிராயும் அஜீத்ஸிங்கும் நாட்டை விட்டகற்றப்பட்ட பொழுது ஸ்ரீ சத்தியமூர்த்தி முதன் முதலாக ஒத்துழையாமையில் ஈடுபட்டார். பி. ஏ. வகுப்பில் அவரும் அவருடைய சகாக்களும் வகுப்புகளுக்குப் போகாமல், பரீக்ஷைகளுக்கும் போகாமல் ஸ்டிரைக் செய்தனர்.

* * * *

மறுபடியும் அதே காஞ்சிபுரத்தில் சில வருஷங்களுக்குப் பிறகு மாகாண மகாநாடு நடைபெற்றது. ஸ்ரீ திரு. வி. கலியாண சுந்திர முதலியார் தலைமை வகித்தார். ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாச அய்யங்காரை எதிர்த்து ஸ்ரீமான்கள்

ஈ.வே. ராமசாமி நாயக்கர், சுரேந்திர நாத் ஆர்யா, எஸ். ராமநாதன் முதலியோர் பேசினர். ஸ்ரீ ஐயங்கார் தன்னந்தனியே மேடை மீது தவித்தார். அப்பொழுது காங்கிரஸில் இருந்த அப்துல் ஹமீத் கான் 'ஸ்ரீ சத்தியமூர்த்தி எங்கே? அவரைக் கொண்டுவாருங்கள்' என்று கதறினர். ஸ்ரீ சத்தியமூர்த்தி வந்தார். மத்ய மாகாணத்தில் சுயராஜ்யக் கட்சித் தலைவர் ஸ்ரீ தாம்பே காங்கிரஸுக்குத் துரோகம் செய்து, சர்க்காரிடம் நிர்வாகப் பதவியைப் பெற்று விட்டதால், காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியை நம்பக் கூடாதென்பது ஈ. வே. ராமசாமி நாயக்கர், ஆர்யா இவர்களின் வாதம். இதை ஸ்ரீ சத்தியமூர்த்தி ஒரே வினாடியில் உடைத்தெரிந்தார்.

"400 பேர்கள் மெம்பர்களாக கொண்ட சுயராஜ்யக் கட்சியில் ஒரு தாம்பே துரோகம் செய்தார். அது எங்களை தலைகுனியச் செய்தது. மற்ற 399 பேர் பரிசுத்த தேச பக்தியுடன் தியாக உணர்வில் இருக்கிறோம். ஆனால் பொழுது போனால் பதவி பட்டம் என்று அலைந்து சர்க்காருடன் குலாவி தேசத்தைக் காட்டிக் கொடுக்கும் இந்தக் கட்சிக்கு எங்களைக் குறைக் கூற வாய் ஏது?

நெல்லுடன் உமியிருக்கிறது, ரோஜாவுடன் பிறந்தது முள். பலாப்பழத்தின் மீதும் முள் இருக்கிறது. உமியையும் முள்ளையும் கண்டு அவற்றை விலக்கி விடுகிறோமா? ஆகவே புலித் தோல் போர்த்த வேஷதாரிகளை விலக்குங்கள், சுயராஜ்யக் கட்சியை ஆதரியுங்கள்" என்று கர்ஜித்தார். எதிரிகள் வாய் மூடினர். காங்கிரஸ் வெற்றிபெற்றது.

# சட்ட சபையில் சத்தியமூர்த்தி

டாக்டர் பி. சுப்பராயன்

[டாக்டர் சுப்பராயன் சத்தியமூர்த்தியின் அத்யந்த நண்பர். அவர் மந்திரி சபை அமைத்து ஜஸ்டிஸ் கட்சியை எதிர்ப்பதற்கு, துணை புரிந்தவர் அவர்தான். சத்தியமூர்த்தியின் சவச் சடங்கின்போழுது பிரசன்னமாக இருந்த ஒரு பெரும் தலைவர் ஸ்ரீ சுப்பராயன் ஒருவரே. அவர் இக் கட்டுரையில் சத்தியமூர்த்தி சட்ட சபைகள் மூலம் எவ்வாறு தேசத்திற்கு உழைத்திருக்கிறார் என்பதை விளக்குகிறார்.]

1920-ம் வருஷம் கல்கத்தாவில் நடைபெற்ற ஸ்பெஷல் காங்கிரஸில் ஒத்துழையாமை இயக்கம் ஒப்புக்கொண்ட சமயம், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் சட்ட சபைகளை விடுவது ஜனங்களின் எதிரிகளுக்கே உபயோகப்படுமென்று வாதாடினார். ஆனால் அவரது காங்கிரஸ் பக்தியும், காங்கிரஸிலுள்ள ஆர்வமும் சத்தியமூர்த்தியை சட்ட சபைக்குப் போகாமல் அத்தருணத்தில் நிறுத்தியது.

1923-ம் வருஷத்தில் சுயராஜ்யக் கட்சி ஆரம்பித்தவுடன் சத்தியமூர்த்தி சென்னை பல்கலை கழகத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்டு சென்னை சட்ட சபை அங்கத்தினரானார். அப்பொழுது சுயராஜ்

யக் கட்சியில் ஐந்து அல்லது ஆறுபேர்களே மெம்பர்களாக இருந்தனர். பனகல் ராஜா அவர்கள் இரண்டாம் முறை மந்திரி சபை அமைக்கும்படி நேரிட்டது. அதை எதிர்த்து சர் ஸி. ஆர். ரெட்டி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த சமயத்தில் சத்தியமூர்த்தி அதை ஆதரித்து முதன் முதலாக சட்ட சபையில் பேசினர். அந்தப் பேச்சு இன்னும் நினைத்தபோதெல்லாம் என்னை உத்ஸாகப்படுத்துகிறது. அன்று முதற்கொண்டே சட்ட சபை விஷயங்களில் இந்திய சுதந்திரத்தைப் பொறுத்தமட்டில் ஒரு பெரிய நிபுணர் இருக்கிருர் என்பது எல்லாருக்கும் தெரிந்தது. அந்த மூன்று வருஷங்களிலும் சத்தியமூர்த்தி கேள்வி கேட்டாலோ அல்லது பேசினுலோ அரசாங்கத்தை சேர்ந்தவர்கள் அதன்படி நடக்காவிட்டாலும் திகில் அடைந்தார்கள் என்பதற்கு சந்தேகமேயில்லை. அவர் கேட்ட கேள்விகளால் ஜனங்களுக்கு பல நன்மைகள் கிட்டியது என்பது என் எண்ணம்.

1926-ம் வருஷத்தின் தேர்தலிலும் சத்தியமூர்த்தி சென்னை சட்ட சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது சுயராஜ்யக் கட்சி தான் சென்னை சட்ட சபையில் பெருவாரியானக் கட்சியாக விளங்கிற்று. அவர்கள் மந்திரி சபையை அமைத்திருக்கலாம். அதில் சத்தியமூர்த்தி கட்டாயமாக மந்திரியாக வந்திருப்பார். ஆனல் காங்கிரஸின் கொள்கையை சுயராஜ்யக் கட்சி ஏற்றுக்கொண்டிருந்ததினுல் மந்திரி சபை அமைக்க மறுத்துவிட்டது. ஜஸ்டிஸ் கட்சியானது தேர்தல்களில் தோற்றுவிட்டதினுலும், பெருவாரியானக் கட்சி மந்திரி சபை அமைப்பதற்கு மறுத்துவிட்டதாலும் சுயராஜ்யக் கட்சியின் ஆதரவைக்கொண்டு என்னுல் ஒரு மந்திரி சபை

அமைக்கப்பட்டது. பல விஷயங்களில் சத்திய மூர்த்தி இம் மந்திரி சபைக்கு ஆதரவளித்ததை மறுக்கமுடியாது. ஒரு விதத்தில் சுயராஜ்யக் கட்சியின் உதவி அத்தருணத்தில் இம் மந்திரி சபைக்கு கிடைத்ததென்றால் அதற்கு சத்திய மூர்த்திதான் காரணம் என்று ஒப்புக்கொள்ள வேண்டும்.

சென்னை ஸ்தல ஸ்தாபனங்களின் சட்டத்தி லும், ஜில்லா போர்டு, நகர சபை திருத்த சட்டத் திலும் மிக ஊக்கத்துடன் சத்தியமூர்த்தி உதவி யளித்தார்.

பொதுத் தொகுதிகள் வழியாக எல்லா பிரதி நிதிகளும் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றும், அரசாங்கத்தார் இந்த ஸ்தாபனங்களுக்கு பிரதி நிதிகள் நியமிக்கக்கூடாதென்றும் கொண்டு வந்த அந்த திருத்த சட்டம் பூர்த்தியாவதற்கு அவர் செய்த உதவியை நான் என்றும் மறக்க முடியாது. தேர்தலில் எல்லா வரி கொடுப்பவர் களும் வாக்காளர்களாக இருக்கவேண்டுமென்ற திருத்தத்தையும் அவர் முழு மனதுடன் ஆதரித் தார். அண்ணாமலை பல்கலைக் கழகம் நிருவுவதற் காக கொண்டுவந்த சட்டத்திலும் அவருடைய உதவி ஏராளமாக இருந்தது. சென்னை பல்கலைக் கழக சட்டத் திருத்தத்திலும் அவர் பெரும் பங் கெடுத்துக்கொண்டார். ஹிந்துஸ்தானி பாஷை யை பள்ளிக்கூடங்களில் பாடமாக வைப்பதற்கு மந்திரி சபையுடன் ஒத்துழைத்தார்.

ஸைமன் கமிஷன் வந்த சமயத்தில் காங்கி ரஸ் அங்கத்தினர்கள் மறுபடியும் சட்டசபையை விட்டு வெளியேறினபடியால் சத்தியமூர்த்தி தன் பதவியை விட்டார். அப்படி இருந்தாலும் மறுபடியும் காங்கிரஸ் கூடியவுடன் சட்ட சபை

களுக்குப் போகவேண்டுமென்று ஒவ்வொரு காங்கிரஸிலும் சத்தியமூர்த்தி வாதாடினார். அவருடைய பெரும் முயற்சியினால்தான் மறுபடியும் 1934-ம் வருஷத்தில் காங்கிரஸ் பேரால் அபேட்சகர்கள் மத்ய சட்ட சபைக்கு நிற்கவேண்டுமென்ற தீர்மானம் பாட்னுவில் நிறைவேறியது. சத்தியமூர்த்தி சென்னை நகரத்தின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரை எதிர்த்து நின்றவர் இப்பொழுது மத்திய அரசாங்கத்தில் மெம்பராகவிருக்கும் ஸர் ஏ. ராமசுவாமி முதலியார்.

வாக்காளர்கள் ஏராளமாக பிராம்மணரல்லாதவராக இருந்தாலும் காங்கிரஸையே ஆதரிக்கின்றன ரென்பதையும், தேசத்தில் சுதந்திரம்தான் முக்யம் என்பதையும் சத்தியமூர்த்தியின் வெற்றி உலகிற்கு எடுத்துக்காட்டிவிட்டது.

மத்ய அசெம்பிளியில் காங்கிரஸ் கட்சியின் காரியதரிசியாகவும், பிறகு உப தலைவராகவும் பதவி வகித்து அவர் காங்கிரஸின் லட்சியத்தை உலகமறியும்படியாக செய்த சேவைபற்றி நான் சொல்லாமலேயே எல்லாருக்கும் தெரியும்.

அவர் கேள்விகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தருணத்திலும் நமது சுதந்திர தாகத்தை நன்ருக வெளிப்படுத்தியது. சட்ட சபை வழியாக தேச சேவை எவ்வாறு செய்யலாம் என்பதற்கு சத்தியமூர்த்தி வழிகாட்டியாக இருந்தார் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர் நம்மை விட்டு பிரிந்தபின் சட்ட சபையில் அவ்வளவு ஆர்வத்துடன் நமது தேசத்தின் லட்சியத்தை நன்ருக எடுத்துரைப்பதற்கு ஆள் இல்லையென்று சொன்னல் அது மிகையாகாது. அதுவும் இத் தருணத்தில் ஜனநாயகக் கட்சிகள் எல்லாம் ஒன்று

சேர்ந்து அரசாங்கத்தைத் தாக்கும் சமயத்தில் அவர் இருந்திருந்தால் தேசத்தின் பலம் அதிகரித்திருக்கும். ஆனால் தேசம் தன் லட்சியமான சுதந்திரத்தை அடைவதற்கு முன் அவர் நம்மைப் பிரிந்து விண்ணுலகம் சேர்ந்தார். அவருடைய ஆத்மா இச்சேவைகள் மூலம் நம்முடன் இருக்கிறதென்பது என் எண்ணம்.

1936-37 ல் நடந்த சென்னை சட்ட சபை தேர்தல்களில் காங்கிரஸ் ஏராளமான பிரதிநிதிகளை இந்த சட்ட சபைகளில் பெற்றதென்றால் அதற்கு முக்ய காரணம் சத்தியமூர்த்தியின் உழைப்புதான் என்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அச்சமயத்தில் அவர் உடல் நலம் குன்றியிருந்தும் அதைக் கவனியாமல் இரவு பகலாக தமிழ் நாடு முழுவதிலும் பிரசாரம் செய்து உழைத்தார்.

மந்திரி சபை காங்கிரஸினால் நிர்வகிக்கப்பட்டதென்றால் அதற்கும் அவருடைய ஆசை தான் காரணம் என்று சொல்லலாம்.

தேசம்தான் பெரிது என்றும், பட்டம் பதவிகள் துச்சமென்பதையும் அவர் நினைத்தவர். மந்திரி பதவியை ஏற்றாலும் ஏற்கலாம் என்பதை விட்டு விட்டு அவர் மத்ய சட்ட சபையிலேயே மெம்பராக இருந்தது இதை நன்றாக புலப்படுத்தும். சட்ட சபையில் தேசத்திற்காக பாடு படுவதற்கு ஒரு மனிதர் பிறந்தார் என்றால் அவர்தான் சத்தியமூர்த்தி.

———

'காங்கிரஸின் சார்பாக ஸ்ரீ சத்தியமூர்த்தி ஒருவர் மாத்திரம் சட்டசபைக்குப் போனால் போதுமானது.'

—மகாத்மா காந்தி.

# சட்ட சபைக்கே வாழ்க்கை அர்ப்பணம்

## புலாபாய் தேசாய்

[மத்ய அசெம்பிளியில் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஸ்ரீ புலாபாய் தேசாய். காரியதரிசி சத்தியமூர்த்தி. பின்னர் தான் உபதலைவரானார். இருவரும் ஒன்று சேர்ந்து தான் தங்கள் பேச்சுத் திறத்தாலே அதிகார வர்க்கத்தின் அட்டூழியங்களை அம்பலத்திற்கு கொண்டு வந்தனர், தேசாயிடம் சத்திய மூர்த்திக்கு அபார மதிப்புண்டு. அவருக்கும் சத்திய மூர்த்தியிடம் பிரேமை உண்டு.]

"ஸ்ரீ சத்திய மூர்த்தி 1935-ல் மத்திய சட்ட சபையில் சேருவதற்கு முன்பே சென்னை சட்ட சபையில் நல்ல பெயரெடுத்துவிட்டார். மத்திய சட்ட சபைக் காங்கிரஸ் கட்சிக்கு அவர் காரிய தரிசியாக இருந்தார். பண்டித கோவிந்த வல்லப பந்த் ஐக்கிய மாகாணத்தின் பிரதம மந்திரி தலைமையை ஏற்ற பிறகு, ஸ்ரீ சத்தியமூர்த்தி மத்திய சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியின் உப தலைவரானர். சட்ட சபை வாழ்க்கைக்கே அவர் விடப்பட்டார். அத்தகைய வாழ்க்கையையே அவர் விரும்பினர். அவர் வாழ்க்கை முழுவதையும் அரசியலுக்கே அர்ப்பணம் செய்தார். அவர் மனம் இணையற்ற முறையில் சுறுசுறுப்பாக

வேலை செய்தது. அவ்வப்பொழுது தோன்றும் அரசியல் பிரச்னைகளைப் பற்றி அவர் பயப்படாமல் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார். அவர் அந்தரங்க சுத்தியுடன் கூடி உண்மையாகப் பொது நலனுக்குச் சேவை செய்தார். உணர்ச்சி ததும்பும் அவருடைய மனோபாவம் அவருடைய நட்பை ஆழ்ந்ததாகச் செய்தது. பொது மக்களைக் கிளர்ச்சி செய்துவிட்டுக்கொண்டேயிருக்க வேண்டும் என்ற கொள்கையை அவர் பூர்ணமாக நம்பினார்.

ஏதாவது ஒரு பிரச்னையைப் பற்றி ஜனங்கள் அவரை யோசனை கேட்காமல் ஒரு நாளாவது கழிந்ததில்லை. சட்ட சபையில் கேள்வி நேரத்தில் மாத்திரமின்றி அவ்வப்பொழுது விவாதத்துக்கு வந்த இதர விஷயங்களைப் பற்றியும் அவர் சர்க்கார் கட்சியுடன் தீவிரமாகப் போர் புரிந்தார். எல்லோருடைய அன்பையும் மரியாதையையும் அவர் பெற்றார்."

---

*...கேள்வி நேரம் சத்தியமூர்த்திக்கு சர்வமான்யம். அடிக் கேள்வி மிகவும் சாதாரணமாக இருக்கும். பதில் சொல்ல வேண்டியது தான். புதைவாணம் போல் புறப்படும் உபகேள்விகள், மழுப்ப முடியாது. ஏய்க்க முடியாது. மடக்கி விடுவார். கேள்விநேரம் சோதனை காலம் அதிகாரிகளுக்கு. சத்தியமூர்த்தியைக் கண்டால் சிம்ம சொப்பனம். இவ்வளவுக்கும் அதிகாரிகளுக்கு இவரிடத்தில் அலாதி மதிப்பு. வேலை தெரிந்தவர், விஷயம் தெரிந்தவர், பொருப்பை உணர்ந்தவர் என்பதே காரணம். சட்ட சபைக்குள் பொக்கிஷ மெம்பர் கிரெக்கும் பொது ஜன மெம்பர் சத்தியமூர்த்தியும் நரியும், நாயும் போல சண்டை போடுவர். சபைக்கு இருவரிடம் காணும் அன்யோன்யம் ஆச்சர்யமாக இருக்கும். அந்தரங்கத்தை அறிந்து கொண்டால் ராஜிய வாழ்வில் கசப்பு காணாது......*

—'தராசு' கட்டுரையில்,

ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாசன்.

# மந்திரியாக சேவை செய்யவில்லையே!

**ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர்**

"ஸ்ரீ சத்தியமூர்த்தி கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த பொழுது முதலே எனக்கு அவரைத் தெரியும். ஸ்ரீ சத்தியமூர்த்தி உன்னதமான நிலைமையில் இருந்தபொழுது நான் சென்னை சர்க்காரில் இருந்ததாலும் அவர் ஒரு எதிர்க் கட்சித் தலைவராயிருந்ததாலும் பிற்காலத்தில் பல துறைகளிலும் அவருடைய செய்கைகளை நான் நன்ருய் கவனித்து வந்திருப்பதாலும், அவரைப்பற்றி எனக்கு மிக உயர்ந்த அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டது. அவருடைய முயற்சியும், ஆளும் தன்மையும் என் மனதைக் கவர்ந்துவிட்டன.

"அவர் இணையற்ற பிரசங்கியாக விளங்கினர். தென் இந்தியாவில் பாமர மக்களிடையேயும் அரசியல் அறிவைப் புகுத்திய தலைவர்களில் இவர் முதன்மையானவர். அவர் ஆங்கிலத்திலும், சம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் தட்டுத் தடங்கலின்றி பேசினர். இலக்கியங்களைப் படிப்பதிலும், நாடகம், சங்கீதம் முதலியன உள்பட அழகுக் கலைகளை அனுபவிப்பதிலும் அவருக்கு அதிக ஆசை.

அவர் மந்திரி சபையில் சேர்க்கப்படாதது சென்னை மகாணத்துக்கே ஒரு பெரிய

நஷ்டம் என்பது என் அபிப்பிராயம். இவ்வளவு பெருமைகள் வாய்ந்த ஒருவர் தம்முடைய திறமைகளைக் காட்ட ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படாதது வருந்தத்தக்க விஷயம் என்பதைக் கூறாமல் இருக்க முடியாது.

அரசியலில் நானும் அவரும் வேறுபட்டிருந்தாலும் நாங்கள் நெருங்கிய நண்பர்களாகவே இருந்தோம், இன்னும் நாற்றுக்கணக்கான பேர்களுக்குத் தோன்றுவது போல் அவர் உயிர் நீத்தது எனக்கு ஏற்பட்ட ஒரு சொந்த நஷ்டம் என்றே உணர்கிறேன்."

---

## 'கன்றின் குரலைக்கேட்டு கனிந்து வரும் பசு'

திருச்சி சிறையில் ஸ்ரீ சத்தியமூர்த்தி இருந்தபொழுது தன் குமாரி லக்ஷ்மியிடம் அவருக்கிருந்த அளவற்ற பிரேமை வெளிப்பட்டது. லக்ஷ்மி வெள்ளிக்கிழமை 'இன்டர்வ்யூ'வுக்கு வருவதாக இருந்தால் இவர் புதன்கிழமை முதற்கொண்டே 'லக்ஷ்மி நாளன்னறு வருகிறாள்!' என்று பார்த்தவர்களிடமெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பார். வியாழக்கிழமை இரவு சாதாரணமாக இரவு ஒரு மணிக்கு வரும் தூக்கம்கூட அவருக்கு வராது. வெள்ளிக்கிழமை காலையிலிருந்து இருப்புக் கொள்ளாத பரபரப்பு. சிறைவாசலில் லக்ஷ்மி வந்துவிட்டதாகத் தெரிந்ததும் 'லக்ஷ்மி!' என்று கூப்பிட்டுக்கொண்டே கிளம்புவார். அப்பொழுது அவருடைய நடை ஓட்டமாகத்தான் இருக்கும். "கன்றின் குரலைக் கேட்டு கனிந்து வரும் பசு"வின் ஞாபகம் பார்ப்பவர்களுக்கு வராமல் போகாது.

—'3 மாதம் கடுங்காவல்'
(கல்கி)

# தேசபக்தர் சத்தியமூர்த்தி

வி. என். முத்துரங்க முதலியார்

[தங்கமான மனுஷ்யன் என்றால் அவர் தான் முத்துரங்க முதலியார். தேச சேவையில் உத்ஸாகம் குன்றாத ஊக்கமுடையவர். ஸ்ரீ சத்தியமூர்த்தியின் சேவைகளைப் பற்றித் தலைவர் முத்துரங்கம் இக்கட்டுரையில் எழுதியிருக்கிறார்.]

ஸ்ரீ சத்தியமூர்த்தியும் நானும், கிருஸ்துவ கலாசாலையில் ஒன்றாகப் படித்தோம். பிறகு அவர் சட்டக்கல்லூரியில் சேர்ந்து வக்கீல் ஆனார். வக்கீல் ஆனபோதிலும், அவர் கவனம் முழுவதும் தேசத்தின் அரசியல், பொருளாதார நிலைமையை ஆராய்ந்து அதை சீர்படுத்துவதிலேயே செலுத்தப்பட்டது. ஆகையால்தான் ஆரம்ப முதலே அவர் காலத்தை பொது மேடையில் தேச விடுதலைக்காக செலவழித்தார்.

அன்னிபெஸண்ட் ஆரம்பித்த 'ஹோம் ரூல்' இயக்கத்தில் நானும் அவரும் பொது வாழ்வில் முதன் முதலாக சந்தித்தோம். ஜஸ்டிஸ் கட்சியின் பிற்போக்கானக் கொள்கைகளை கண்டிப்பதிலும், அந்நிய அரசாட்சி, சரண்டல் கொள்கைகளை எதிர்த்துப் பேசுவதிலுமே அவர் காலம் முழுவதையும் கழித்தார். அப்படிச் சொல்வதால் அவர் மற்ற துறைகளில் ஈடுபடவில்லை என்று

அர்த்த மில்லை. கல்வித் துறையிலும், சங்கீதத்திலும், சென்னை நகர சபையிலும், அவர் பெரும் தொண்டாற்றியிருக்கிறார்.

சத்தியமூர்த்தி அவர்கள், தேச சேவையில் மிகுந்த ஆர்வமும், தளராத ஊக்கமும் கொண்டவர். காங்கிரஸில் முதலிலிருந்தே தொண்டாற்றி வந்தவர்களில் அவர் ஒருவர். காங்கிரஸின் கொள்கைகளில் பல தடவைகளில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்ட போதிலும், காங்கிரஸை விட்டு விலகாமல், தன் சொந்த அபிப்பிராயத்தை அப்பொழுதைக்கப்பொழுது வெளியிட்டுக்கொண்டு காங்கிரஸின் ஆணைக்கு பணிந்தே நடந்துவந்திருக்கிறார்.

தேசபந்து ஸி. ஆர். தாஸ் சுயராஜ்யக்கட்சி ஸ்தாபித்தபொழுது அக்கட்சியில் சேர்ந்து சென்னையில் பெரும் தொண்டாற்றியவர்களில் இவரும் ஒரு பெரும் முக்யஸ்தர். சுயராஜ்யக் கட்சியின் சட்டசபை திட்டத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று பெரும் பாடுபட்டு ஓரளவு வெற்றியும் அடைந்தார். அவருடைய மனப்பான்மை பெரும்பாலும், சட்டசபை வேலையிலேயே ஈடுபட்டிருந்தது. ஆயினும் அவர் பெரிய சட்டசபை நிபுணர். சட்டசபைக்கே லாயக்குள்ளவர். அவருடைய திறமை, எல்லாம், சிறைவாசத்தில் விருதாவாகப் போய்விட்டது. என்றெல்லாம் பலர் பேசக் கேட்டிருக்கிறேன். சட்டசபைகளில் சத்தியமூர்த்தி கவர்ன்மெண்ட் கட்சியைச் சேர்ந்தவர்களையும், நிர்வாகசபை அங்கத்தினர்களையும், கேள்விகேட்டு திணர அடிப்பார்.

மூன்று வருஷம் சென்னை சட்டசபையில் அவருடன் நான் அங்கத்தினராக இருந்து அவரது திறமைகளை நேரில் பார்த்திருக்கிறேன்.

3 வருஷகாலம் மத்ய சட்டசபையில் அவருடைய திறமையைக் கண்டு மகிழ்ச்சியும் அடைந்திருக்கிறேன்.

ஆனால் என்ன பிரயோஜனம்? இந்த பொம்மை சட்டசபைகளில் சத்தியமூர்த்தியின் சொற் பொழிவுகள் எல்லாம், காட்டில் பெய்த தேன் மழையைப் போல்தான் ஆகிவிட்டது. பாருங்கள்! இப்பொழுதும் தான் மத்ய சட்ட சபை நடக்கிறது. கட்டுப்பாட்டையும் மீறி காங்கிரஸ் அங்கத்தினர்கள் சிலர் வெகு அழகாகவும் உக்ரமாகவும் பேசுகிறார்கள். வைஸ்ராயோ, மாக்ஸ்வெல் துரையோ, சர். ஏ. ராமஸ்வாமி முதலியாரோ இதைக் காதில் வாங்கிக்கொள்கிறார்களா? சர் முதலியார், தான் இந்தியன் என்பதையே மறந்து இவர்கள் பேச்சை பரிகாசம் தான் செய்கிறார். அமெரிக்காவுக்கு பிரசாரகர்கள் அனுப்புவதை நிறுத்த முடிந்ததா? ரயில்வே கட்டண உயர்வை தடுக்க முடிந்ததா? ஒன்றும் முடியாதுதான்.

இம்மாதிரியான சட்டசபைகளின் பயனற்ற தன்மையை உணர்ந்துதான் ஸ்ரீ சத்தியமூர்த்தி மகாத்மா காட்டிய ஒரே வழிதான் நம் தேசத்தின் விடுதலைக்குச் சிறந்த வழி என உணர்ந்து போராட்ட காலங்களில் எல்லாம் உடல் நலங்களைக் கருதாது சத்யாக்ரஹ வெள்ளத்தில் தானும் விழுந்து தொண்டாற்றினார். அபிப்பிராய பேத மிருந்த போதிலும், காந்திஜி காட்டுகிற வழிதான் நேரானவழி, என்று தெரிந்து அதில் முழுமனதுடன் ஈடுபட்டார்.

ஆனால் துரதிருஷ்டவசத்தால் சிறைக்குச் செல்லும் ஒவ்வொரு சமயங்களிலும் அவருக்கு தேக அசௌக்யம் ஏற்பட்டது. ஒரு சிலர் அவர்

சிறையிலிருந்து வெளிவருவதற்காக சூழ்ச்சி செய்கிருரோ என்று கூட சந்தேகித்ததுண்டு. ஆனுல் எனக்குத் தெரியும். உண்மையில் அப்படி ஒன்றும் இல்லை. அவர் சிறையிலிருந்த ஒவ்வொரு தடவையும் அவர் அருகில் நானும் இருந்தேன். அவருடைய தேகநிலையை அப்பொழுது நான் நேரில் பார்த்திருக்கிறேன். அவர் நெடுநாள் சிறையிலிருப்பது மிகவும் கஷ்டமான காரியம்தான். சுறுசுறுப்பாக குறுகுறு வென்று சட்ட சபைகளிலும், பொது மேடைகளிலும், இடைவிடாது பிரசார வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவரை சிறையிலேயே அடைத்துப் போட்டால் தேகநலம் குன்ருமல் இருக்குமா?

1942ஆம் ஆகஸ்டுமீ 8உ பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு உடல் நலம் குன்றியிருந்த போதிலும் கடமையைச் செய்வதற்கு அவரும் வந்திருந்தார். மற்றவர்களுக்குச் செய்ததுபோல் அவரையும், ஒரு குற்றமும் செய்யாதிருக்கையில் அரசாங்கம் அரக்கோணம் ஸ்டேஷனில் கைது செய்தது. நாங்கள் வேலூர் சிறையிலே பம்பாயை விட்டபிறகு கைதிகளாக சந்தித்தோம். அன்று முதற்கொண்டே வேலூர் சிறையில் அவர் வைத்திய சிகிச்சைப் பெற்றுவந்தார். ஒரு மாதத்திற்கெல்லாம் மற்றவர்களுடன் வேலூரிலிருந்து ரயிலில் அவரை கொண்டு போனுர்கள். நாகபுரி மத்ய சிறைக்கு அழைத்துப் போவதாக முதலில் கூறப்பட்டது. ஸ்டேஷனில் இறங்கியவுடன், இரண்டு போலீஸ் 'வான்' களில் 60க்கு மேற்பட்ட எங்களை அடைத்து 117 மைல்களுக்கு அப்பாலிருக்கும் அமராவதி சிறைக்கு அழைத்துச் சென்றனர். எங்களுடைய படுக்கை முதலிய சாமான்கள் எல்லாம் 'வானி'ன்

மேல் இருந்தது. நடுவிலே மழை வந்துவிட்டது. சாமான்களையும் எடுத்து உள்ளே போட்டுக் கொண்டு விவரிக்க முடியாத கஷ்டங்களுடன் இரவு 9-30 மணிக்கு சிறைக்குச் சென்றோம். சிறையில் ஆகாரவசதி ஒன்றும் ஏற்பாடாக வில்லை. சத்தியமூர்த்தி அவர்கள், ஆகாரவசதி யளிக்காவிட்டால் ஜெயிலுக்குள் வரமுடியா தென்று கூறினார். அன்று சிறை அதிகாரிகளுடன் மல்லுக்கு நின்றார். அதனால் இரவு 12 மணிக்கு ஆகாரம் தயாராகி எல்லாருக்கும் அளிக்கப்பட்டது. தூங்காமலிருந்தவர்கள் சாப்பிட்டார்கள்.

அமராவதியின் சீதோஷ்ண ஸ்திதி சத்திய மூர்த்திக்கு ஒத்துக்கொள்ள வில்லை. அவருடைய தேகநிலை நாளுக்குநாள் க்ஷீணத்தை யடைந்துக் கொண்டேவந்தது.

பிறகு இர்வின் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப்பட்டு மூன்று மாத காலம் சிகிச்சை பெற்றார். அதிகாரவர்க்கம் கருணைகாட்டி சென்னை சிறைக்கு மாற்றினார்கள். ஒரு வார காலம் ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கூட மாற்றாமல் சென்னை சிறையிலேயே வைக்கப்பட்டிருந்தார். அதற்கு மேல் அருள்புரிந்து அரசாங்கத்தார் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர். என்னபயன்? அவருடைய முடிவுகாலம் நெருங்கிவிட்டது. சர்க்காரும் அதை உணர்ந்து விட்டனர். 'இனி பிழைக்க மாட்டீர்' என்று தெரிந்தவுடன் விடுதலை செய்துவிட்டார்கள்.

தன் ஒரே பிரிய புத்திரியின் விவாகத்தையும் நடத்திப் பார்க்கவும் முடியாமல் அவர் இறந்து விட்டார்.

அவர் ஆத்மா பிரியும் காலத்திலும் இந்த தேச விடுதலையைத்தான் சிந்தித்திருக்கும். மகாத்மா

உயிருடன் இருக்கையிலேயே இந்தியா சுதந்திரமடைய வேண்டும் என்று அவர் அடிக்கடி கூறுவார். மாணவர்களும் வாலிபர்களும் அவர் வார்த்தையை உண்மையாக்க உழைக்கவேண்டும்.

எனக்கும் சத்தியமூர்த்திக்கும் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டதுண்டு. என் அபிப்பிராயத்தைக் கேட்டு சரி என்று அவர் ஒப்புக்கொண்டு என்னுடன் ஒத்துழைப்பதும் உண்டு. இரண்டு முறை அவரும் நானும் தமிழ் நாடு காங்கிரஸ் தலைமை பதவிக்கு போட்டி போட்டோம். பதவி மோகத்தினல் இருவரும் போட்டியிட்டதில்லை.

சில சில அபிப்பிராய பேதத்தாலும், நண்பர்களின் வேண்டுகோளினுலுமே நான் அவருடன் போட்டி போட நேர்ந்தது. அப்படி போட்டியிட்டும் அவருக்கோ எனக்கோ மன வேற்றுமையோ மனக் கசப்போ ஏற்பட்டதே கிடையாது. அவர் தலைவராயிருந்த சமயத்திலும் சரி, நான் தலைவனுக இருந்த காலத்திலும் சரி இருவரும் மனம் உவந்து ஒத்துழைத்திருக்கிறோம்.

சமீபத்தில் தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய பாகிஸ்தான் பிரசாரத்தை முழு மனதுடன் சத்தியமூர்த்தி எதிர்த்தார். இந்த பாகிஸ்தான் பிரசாரம் ஆரம்பிக்கப்படாமல் மாகாண நிர்வாகத்தை கைப்பற்ற வேண்டுமென்ற பிரசாரம் மாத்திரம் தனியாக ஆரம்பிக்கப்பட்டிருந்தால் சத்தியமூர்த்தி அதில் கலந்து கொண்டிருப்பார் என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

இப்பொழுது நாம் எடுத்துக்கொள்ளக் கூடிய மாகாண நிர்வாகம் மிக பசையற்றது, அதிகாரமற்றது, என்பதில் சந்தேகமில்லை. அப்

படி இருக்கும் இந்த நிர்வாகத்தை கைப்பற்ற வேண்டுமென்ற இயக்கத்தில் அவர் சேர்ந்து இருப்பாரா? மாட்டாரா? என்று ஜோஸ்யம் சொல்ல நான் தயாராக இல்லை. அவர் ஒப்புக் கொண்டிருக்க மாட்டார் என்று நினைக்கிறேன். அது என் சொந்த அபிப்பிராயம்.

1942-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 9உ தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அதற்கு பிறகு பல பெரும் தொண்டர்களை 'காவு' கொடுத்து விட்டோம். சத்தியமூர்த்தி இறந்து ஒரு வருஷம் ஆகிவிட்டது. ஆனால் சுயராஜ்யம் எங்கே? ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை வேண்டு மென்று பலர் கூக்குரலிடுகிறார்கள். அதற்கு பாகிஸ்தான் வழி என்றும் கூறுகிறார்கள். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை அவசியமென்பதை உணராத இந்தியனே இல்லை. தேசத்தை துண்டாடி ஒற்றுமையைத் தேடவேண்டும் என்ற கொள்கையையே தான் பலர் எதிர்க்கின்றனர்.

பிரசித்தி பெற்ற ஆகஸ்ட் தீர்மானத்தில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு வழி காட்டியிருக்கிறது. சென்னை காங்கிரஸில் 1927 வருஷத்தில் நிறைவேற்றப்பட்ட ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைத் தீர்மானமும் இருக்கிறது. ஜின்னா அவர்களே ஆதரித்து சமீபத்தில் பேசியிருக்கிறார். அது நிற்க இப்பொழுது நம்முள்ளேயே ஒரு கூட்டத்தார் காங்கிரஸின் திட்டத்தை ஆதரிக்க வேண்டு மென்றும், மற்றொரு கூட்டத்தார் காங்கிரஸை குழிவெட்டி புதைக்க வேண்டு மென்றும் கூறித் திரிவது மிகவும், வெறுக்கத்தக்கதாக இருக்கிறது. நமக்குள் இந்த பேதங்கள் போய், ஒற்றுமை உண்டாகி நாடு விடுதலையடைந்தால் தான் தேச பக்தர் சத்தியமூர்த்தியின் ஆத்மா சாந்தியடையும்.

# சத்தியமூர்த்தியின் கடிதம்

கே. பாஷ்யம்

[தமிழ் நாட்டில் சத்தியமூர்த்தியும் ஸ்ரீ பாஷ்யமும் சேர்ந்து காங்கிரஸுக்கு தொண்டாற்றியது உண்டு. சில்லறை சச்சரவுகளில் ஈடுபட்டதும் உண்டு. ஆனால் காங்கிரஸின் கொள்கைக்காக தியாகம் செய்வதிலும் இருவரும் போட்டியிட்டனர். ஒரு காங்கிரஸ் வாதியைப்பற்றி மற்றொரு காங்கிரஸ் வாதி எழுதும் கட்டுரை இது]

காலஞ்சென்ற ஸ்ரீ சத்திய மூர்த்தியின் அபாரத் திறமைகளைப் பற்றி என் அஞ்சலிகளை செலுத்த எனக்கு ஒரு சந்தர்ப்ப மளிக்கப் பட்டதற்கு மிகவும் சந்தோஷ மடைகிறேன்.

அவருடைய குண விசேஷங்களில் ஒரே ஒரு அம்சம் மட்டும் என்மனதில் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது. அவர் கொண்ட நம்பிக்கையில் அபாரமான உறுதி, அதை தைரியமாக வெளியிடும் ஆற்றல் இவைகளே.

1931-ம் வருஷத்தில் நாங்கள் எல்லோரும் வேலூர் சிறையில் இருந்தோம். 'ஏ' வகுப்பு 'பி' வகுப்பு கைதிகள் எல்லாரும் அப்பொழுது ஒன்றுகவே வைக்கப்பட்டிருந்தனர். சட்டசபை திட்டம் பற்றிய நினைவே அப்பொழுது ஜனங்கள் மனதில் பதிந்து கிடந்தது. சட்ட சபை

களில் புகுந்து சர்க்காரை எதிர்த்து சண்டை போட வேண்டுமென்பதே சத்தியமூர்த்தியின் அபிப்பிராயம். அப்படி செய்வதுதான் அதிக பலனைத் தருமென்று அவர் கருதினர். தமிழ் நாடு, ஆந்திரதேசம், மலையாளம் இந் நாடுகளின் தலைவர்களில் பெரும்பாலோர் இதை ஆட்சேபித் தனர். இந்த சமயத்தில்தான் மகாத்மா காந்திக்கு சத்தியமூர்த்தி ஒருகடிதம் எழுதினர். இக் கடிதம் எப்படியோ வெளிப்பட்டு பத்திரிகை களில் பிரசுரிக்கப்பட்டு விட்டது. இதனல் சில விரும்பத்தகாத விளைவுகளும் விசாரணைகளும் ஏற்பட்டன.

பெரும்பாலோர் தன் கருத்திற்கு விரோத மாக எண்ணம் கொண்டிருந்த போதிலும், பிறர் எதிர்க்கும் தன் திட்டத்தை விடாப் பிடி யாகவும் தைரியமாகவும் பிரசாரம் செய்தார். இதனல் அவருக்கு வசவுகள்கூட கிடைத்த தென்றாலும் அவர் அவைகளைப் பொருட்படுத்த வில்லை. எப்பொழுதும் அவர் தயங்கியதேயில்லை. முடிவில் சட்ட சபைக்கு செல்லும் திட்டத்தை காங்கிரஸ் ஏற்கும்படிச் செய்து தேர்தல்களில் காங்கிரஸ் போட்டி யிடும்படிச் செய்தார்.

தேர்தல்களை அவர் நடத்தி வைத்தது பங் கெடுத்துக் கொண்டது மிகவும் ஆச்சரியப் படும் படி யிருந்தது. அவருடைய தீரத்தினலும், விடா முயற்சியினலும் சலியா உழைப்பினலும் தான் காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி பெற் றனர். உண்மையான தேசபக்தியுள்ள இந்தியர் யாரும் இதை மறக்க முடியாது. அவர் இந்த தேர்தல் போட்டியில் காட்டிய ஒரு சக்தி அமா னுஷ்யமானது. அவர் பின்னர் உடல்நலம் குன்றி படுக்கையாகப் படுத்தது தேர்தலில் அவர் பட்ட

சிரமங்களின் விளைவாக இருக்கலாம். ஆனல் அவர் நம்பிக்கை வைத்த விஷயங்கள் ஈடேறுவ தற்கு ஆகும் செலவுகளை கணக்கிடுவதில்லை.

சிறந்த உன்னத் வாழ்க்கை லட்சியமில்லாத வர்களும், பதவி எங்கு போய்விடுமோ என்று சர்வ ஜாக்கிரதையுள்ளவர்களும், இப்பொழுது அதிகாரத்திலும் அந்தஸ்திலுமிருக்கின்றனர். ஆனல் இந்திய சுதந்திரத்திற்காக போரிட்ட அந்த வீரர் உயிருள்ள கடைசி நிமிஷம்வரை போராடி விட்டு நம்மிடமிருந்து பிரிந்து விட்டார். அவர் தன் பெயர் அழியாமலிருக்க 'சேவை' என்ற சிறந்த ஞாபகச் சின்னத்தை ஏற்படுத்திவிட்டே சென்றிருக்கிறார்.

---

மகாத்மா காந்தி சட்டசபைகளையும் கோர்ட்டு களையும் கலாசாலைகளையும் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்று சொன்னது ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு பிடிக்கவில்லை. மன்னார் குடியில் ஒரு கூட்டத்தில் பேசும் பொழுது மகாத்மாவின் புதுத்திட்டத்தைத் தாக்கி "காந்தி சொல்கிருன்" என்று ஏகவசனத்தில் குறிப்பிட்டார். ஒருவேளை இது வாய் தவறி வந்ததாக இருக்கலாம். தமிழ் நாட்டில் 'காந்தி பைத்தியம்' அதிவேகமாகப் பரவி வந்த காலம் அது. கூட்டத்தில் சிலருக்குப் பொறுக்கவில்லை, காந்திஜியைப்பற்றி ஏகவசனமாகப் பேசக்கூடாது 'என்று கூச்சல் கிளம்பின.

ஒரு நிமிஷங்கூட யோசனை செய்யாமல் ஸ்ரீ சத்திய மூர்த்தி நிலைமையை சமாளித்த விதம் ஆச்சரியமானது. 'ராமன் வனம் சென்ருன் என்று சொல்கிறேம். கண்ணன் வெண்ணெய் திருடினன் என்கிறேம். இதனல் ராமனையும் கிருஷ்ணனையும் நாம் அவமதிக்க வில்லை. ராமனையும் கிருஷ்ணனையும் போல் காந்தி ஜியை நான் அவதாரப் புருஷனுக மதிக்கிறேன்.'

—'தீரர் சத்தியமூர்த்தி'
கல்கி.

# கனவு நிறைவேறுமா?

ஸ்ரீ சத்தியமூர்த்தி மேயராக இருந்தபொழுது நகரை அழகாகவும் சுகாதாரத்துடனும் விளங்கும் படிச் செய்யவேண்டுமென்று அரும்பாடு பட்டார். அவர் கண்ட கனவு பின் வருபவைதான். அவைகள் நிறைவேறுமா?



சென்னை நகரம் வடக்கே ஆவடி முதல் தெற்கே தாம்பரம் வரையில், கிழக்கே கடல் முதல் மேற்கே பூந்தமல்லி வரையில் பரவ வேண்டும்.

ஏழைகள் உள்பட எல்லாரும் வசிக்க நல்ல வீடுகள் ரஸ்தாக்கள் தூசியே இல்லாமல் பளிங்கு போல் இருக்க வேண்டும்.

வியாதியே நகரில் வரக்கூடாது. வந்தாலும் சீக்கிரம் நீங்க நல்ல வைத்தியசாலை வசதிகள் ஏற்பட வேண்டும். குழந்தைகளுக்கு வேண்டிய நல்ல பால்

வெளியிலிருந்து வரவேண்டும். பள்ளிக்கூடங்கள் அதிகரிக்க வேண்டும். எல்லாருக்கும் குடிக்க நல்ல தண்ணீர் கிடைக்க வேண்டும். வீணுக தண்ணீரை விரயம் செய்யக் கூடாது. சாக்கடை தண்ணீர் கடலில் போய் விழாமல் நவீன முறையில் உபயோகப் படுத்தப்பட வேண்டும். கடற்கரையில் தண்ணீர் அருகே புதிய ரஸ்தா போடப்படவேண்டும். நகரிலுள்ள எல்லாப் பொது இடங்களும், நந்தவனங்கள், விளையாடு மிடங்கள் அல்லது ரேடியோ இடங்களாக இருக்கவேண்டும்.

---

## இங்கிலீஷ்காரன் உலகத்தின் போலீஸ்காரனு ?

இங்கிலாந்தில் ஒரு இடத்தில் அவர் பிரசங்கம் செய்துகொண்டிருந்த பொழுது, "இந்தியாவை விட்டு இங்கிலீஷ்காரர்கள் விலகிவந்து விட்டால் கொள்ளை மிதமிஞ்சிப்போய், இந்தியா பாழாய் போகாதா ?" என்று ஒருவர் கேட்டாராம். 'இங்கிலீஷ்காரன் உலகத்துக்கு போலீஸ்காரனு ?' என்று சத்தியமூர்த்தி பதில் சொன்னுராம். 'ஒண்ணுந்தர வாய்த் துடுக்கு !

—'தமிழ் பெரியார்'களி'ல்
வ. ரா.

சென்னை கிருஸ்துவ கலாசாலை பழைய மாணவர் சங்கத்திற்கு சர் உஸ்மான் காரியதரிசியாக வருவதை பலர் விரும்பவில்லை. சத்தியமூர்த்தியிடம் இதை ஒருவர் சொன்னுர். உடனே சத்தியமூர்த்தி மேடைக்கு எழுந்து சென்றுர். 'நீங்கள் சர் உஸ்மானைப் பார்த்திருப்பீர்கள். அவரைப் பார்க்காமல் இருக்கமுடியாது! காரியதரிசி என்றுல் காரியம் செய்யவேண்டும். நாலு இடத்திற்கும் போகவேண்டும். சர் உஸ்மான் அம்மாதிரி செல்ல முடியுமா என்பதை அவரைப் பார்த்து தீர்மானம் செய்யுங்கள்' என்று கூறினுர். உஸ்மான் தோல்வி யடைந்தார் என்பதை சொல்லத் தேவையில்லை.

# தமிழ் வாலிபர்களின் தலைவன்

## ஸ்ரீ சங்கு சுப்பிரமணியம்

[ஸ்ரீ சங்கு சுப்பிரமணியம் அநேக வருஷங்களாக காங்கிரஸ் தொண்டராக இருந்து வருகிறார். தொண்டர்களிடத்தில் தலைவன் என்ற முறையில் சத்தியமூர்த்தி எவ்வாறு நடந்து கொண்டார் என்பதையும் பிரசங்க மேடைகளில் எப்படி ஒளி விட்டு பிரகாசித்தார் என்பதையும் இக் கட்டுரையில் எழுதியிருக்கிறார்.]

ஒரு பேராசிரியரும் ஒரு வீரனும் ஒரு சிற்பியும் காலதேவதையின் சந்நிதியில் வந்து நின்றார்கள். அந்த தேவதை கேட்ட கேள்விகளுக்கு ஒவ்வொருவரும் பதில் சொன்னார்கள்.

பேராசிரியர் புகன்றார்: "எனக்கு சென்ற காலத்திடத்தில் தான் அதிகமான அன்பு. உலகம் உண்டான காலத்திலிருந்து எங்கள் மூதாதையர் செய்துள்ள அற்புதங்களுக்கு ஈடுண்டா?" என்றார்.

வீரன் சொன்னான்: "பழங்காலத்துப் பெருமையைப் பற்றியும் வருங்காலத்து விதியைப் பற்றியும் பேசிக்கொண்டிருப்பேனானால் கண் முன்னே காத்திருக்கும் போராட்டம் என்ன ஆவது? ஆகவே கண்ணுக்கு முன்னுள்ள நிகழ் காலமே எனக்குப் பெரிதாய்ப் படுகிறது" என்றான்.



தொண்டர் உடையில் சத்தியமூர்த்தி
அவருக்கு வலது புறத்தில் ஸ்ரீ முனுசாமி பிள்ளை,
இடது புறத்தில் ஸ்ரீ காமராஜ்.



ஸிம்லாவில் சத்தியமூர்த்தி தம்பதிகள்.

சிற்பி கடைசியாகச் சொன்னான். "அதோ வெறும் பாறைகளாகவும் மண்ணாங் கட்டிகளாக வும் கிடக்கின்றதே. அவ்வளவையும் அழகு மிகுந்த சிலைகளாகச் செய்து உள் கோயிலை அழகு செய்வேன். எனக்கு வருங்காலத்திடம் உள்ள நம்பிக்கை தான் பெரிது" என்றான்.

காலதேவதை பார்த்தாள். "நீங்கள் மூவரும் திரிகால ஞானிகள். மூன்று பேரும் ஒன்று பட் டவர்களானால் முக்யமான ஒரு காரியத்தை உலகில் சாதிக்கலாம். அடிமைப்பட்டுக் கிடக்கும் பாரத நாட்டுக்கு விடுதலை ஏற்பட பல தேச பக் தர்கள் வேண்டியிருக்கிறது. அந்தத் தேச பக்தர் களுக்கு திரிகால உணர்ச்சியும் கட்டாயம் தேவை" என்றாள்.

அந்த மூன்று கால ஞானிகளையும் சேர்த்து ஒன்றாக்கி காலதேவதை தமிழ் நாட்டுக்குத் தந்த பரிசு போன்றவர் ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி.

மிகைபடுத்திச் சொல்வதாக நினைக்க வேண் டாம். அவருக்கு நமது பழைய சரித்திரங்களி டத்திலும் நம் மூதாதையரின் சாதனைகளிடத் திலும் அளவு கடந்த அன்பு. அவ்வப்போது ஏற்படும் காரியங்கள் உடனுக்குடனே நிறை வேற்ற முனையும் கர்மவீரனாகவும் அவர் இருந் தார். சர்வ சாதாரணமாக உள்ள தமிழ் நாட்டு வாலிபர்களை நாடு முற்றிலும் புகழும் வண்ணம் ஆக்கி விடலாம் என்ற நம்பிக்கையோடு சலிப் பின்றி உழைத்து வந்தார். மூன்று காலத்திட மும் அவருக்குப் பற்றுதல் இருந்தது போல வேறு யாருக்கு இருந்தது?

அவருடன் நெருங்கிப் பழகி வந்த வாலிபர் களுக்கு அவர் ஊட்டி வந்த எண்ணம் ஒன்று

முக்யமானது. "கீர்த்தியோடு வாழ விரும்பு" என்ற உபதேசமே அது.

வாலிப உள்ளங்களின் பண்பாடுகளை நன் கறிந்திருந்தவர் ஸ்ரீ சத்தியமூர்த்தி. அவரது உள் ளமும் கடைசிவரை வாலிப உள்ளமே. அவரது மனப்பான்மைக்காகவே அவரை தமிழ் நாட்டின் வாலிபர்கள் பலர் நேசித்து வந்தனர். மனதில் அவரை வைத்து இன்றும் பூசிக்கின்றனர்.

"தேச பக்தன் என்றால் அவன் தன்னலம் துறந்த தியாகியாக இருக்க வேண்டும்? அவன் போயும் போயும் புகழ் கிடைக்காதா என்று அலையலாமா?" என்று ஒருவர் ஒரு தடவை ஸ்ரீ சத்தியமூர்த்தியிடம் கேள்வி போட்டு விட்டு படாதபாடு பட்டார்.

சத்தியமூர்த்தி சொன்னார்: "இந்த தேசத்தின் ஸ்வராஜ்யம் என்ற லட்சியத்துக்காக உழைத்து உழைத்து இது வரை ஆயிரக் கணக்கான பேர் மண்ணோடு மண்ணாகி விட்டார்கள். அப்படி தங்களை பலி கொடுத்துக் கொள்கிறவர்களுக்கு கீர்த்தி ஆசை கூட இருக்கக்கூடாது என்று சொல்கின்ற உம்மை எக்ஸ்ரே பண்ணிப் பார்க்க வேண்டுமென்று தோன்றுகிறது! ஏனெனில் உமக்கு ஹிருதயமே இல்லையோ யென்று சந் தேகிக்கிறேன்!" என்றார்.

கேள்வி போட்டவர் விடவில்லை. "பக்திக் காகவே பக்தி, சேவைக்காகவே சேவை என்ற ஆப்த வாக்யங்கள் நீர் அறியாததா?" என்றார்.

சத்யமூர்த்தியா விடுபவர்? "பக்திக்காகவே பக்தி என்பதெல்லாம் அத்யாத்ம வளர்ச்சி சம் பந்தமான படிக்கட்டுகள். ஸ்வராஜ்ய லட்சியம் என்பது லௌகிகமான ஓர் விருப்பம். அத்யாத்ம

விஷயத்தையும் லௌகீகப் போராட்டத்தையும் அளவுக்கு மிஞ்சி கலந்து குழப்புவதால் ஏற்பட்ட விபரீதமே உமது எண்ணம். நீர் கீதையிலே கண்ணன் சொன்ன வார்த்தைகளைக் கவனியும். "ஆகவே அர்ஜுனா! எழுந்திரு! கீர்த்தியை சம்பாதி! எதிரிகளை வெல்லு! உன் ராஜ்யத்தை திரும்பப் பெற்று நன்றாக போக பாக்கியங்களை அனுபவி" என்றான். தேச சேவைக்கு வரும் நமது வாலிபர்களுக்காகவே சொன்ன வாக்யங்களாக அவை தோன்றவில்லையா?" என்றார்.

அந்த நண்பரிடம் கீதையின் முது மொழிகளைச் சொன்னாரே அந்த மேற்கோளை குறைந்தது பத்து மேடைக்கொரு இடத்திலாவது சத்தியமூர்த்தி கூறி வாலிபர்களுக்கு உணர்ச்சி ஊட்டி வந்தார் என்பதை நாமறிவோம்.

"என்னை இப்படி தூக்கி நிறுத்தி, என் தலையிலே புஷ்பத்தையும் சூட்டி, கைகளைத் தட்டி ஜெய் கோஷமும் செய்து விடுங்கள். அந்த ஆனந்தத்திலேயே நான் எதையும் சாதித்து விடுகிறேனா இல்லையா பாருங்கள்" என்று சத்தியமூர்த்தி எவ்வளவோ இடங்களில் சொல்லியிருக்கின்றார்.

எவ்வளவோ எதிர்ப்புகளுக்கிடையே தனது சொந்த சக்திகளைக் கொண்டே கீர்த்தி பெற்று வந்தவர் ஸ்ரீ மூர்த்தி. சாமர்த்தியமுடைய எந்தத் தமிழ் வாலிபனைக் கண்டாலும் அவனைத் தட்டிக் கொடுத்து, காரியங்களில் ஈடுபடுத்தி, அவனைப் பெரிய மனிதனுக்கி அவனது நிரந்தர அன்பையும் சம்பாதித்துக் கொண்டு விடுவார். அவர் தந்த உற்சாகத்தால் தேச சேவைக்கு வந்து, வளர்ந்து இன்று தமிழ் நாட்டின் தலைவர்களாகவும் தியாகிகளாகவும் இருப்பவர்கள் எத்தனையோபேருண்டு.

தமக்கு நியாயமெனத் தோன்றிய எந்தக் கருத்தையும் பளிச் சென்று சொல்லி வந்தவர் சத்தியமூர்த்தி. சட்டசபைப் பிரவேசம் அவசியம் என்று ஸி. ஆர். தாஸோடு ஆதி காலத்தில் பிரசாரம் செய்ததும், பதவி ஏற்பு அவசியம் என்று பிற்காலத்தில் விடாப்பிடியாகக் கூறி மாகாணங்களில் மந்திரி சபைகளில் காங்கிரஸ்காரர் உட்காருமாறு செய்து கண்டு களித்ததும் சத்திய மூர்த்தியின் விடாப்பிடியான பிரசார வன்மைக்கு உதாரணங்கள். சட்டசபைப் பிரவேச பிரசார காலத்தில் அவர் கட்சியை மகாத்மா, சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் (இப்போது டாக்டர்) முதலியவர்கள் எதிர்த்தார்கள். பிறகு பதவி ஏற்புப் பிரசார காலத்தில் பண்டித நேரு போன்றாரை திருப்தி செய்ய வேண்டியிருந்தது.

கட்சிப் பிரதி கட்சி, போட்டா போட்டி, வாதப் பிரதி வாதம் இவைகள் தான் சத்திய மூர்த்திக்கு அன்றாடம் மூச்சுக் காற்றுகளாயிருந்தன. எதையும் கடைசி வரை விடவேமாட்டார். உடும்புப் பிடி, குரங்குப் பிடி இவைகளையும் மீறியது சத்தியமூர்த்தியின் பிடி.

ஒரு உதாரண சம்பவம்: மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் நாட்டிலே நுழைந்த நாசகாலம். சென்னை கோகலே ஹாலில் சேலம் விஜயராகவாச்சாரியார் தலைமையில் காங்கிரஸ் வாதிகள் கூட்டமொன்று நடந்தது. ஒரு தீர்மானம் பிரேரிக்கப்பட்டு அதை சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் உள்பட பலர் ஆதரித்துப் பேசி வலுப்பெறச் செய்து விட்டனர். ஸ்ரீ சத்தியமூர்த்தி மேற்படி தீர்மானத்துக்கு ஒரு திருத்தம் கொணர்ந்தார். அந்தத் திருத்தப் பிரேரணையை அநுமதிக்க முடியாதென்று

சபைத் தலைவர் அறிவித்து விட்டார். சத்திய மூர்த்தியின் கட்சி அடியோடு மூழ்கி விட்டதாகவும் அவருக்குப் பேசுவதற்குக் கூட 'சான்ஸ்' போய் விட்டதென்றும் சபையோர் நினைத்தார்கள். சத்தியமூர்த்தியா விட்டு விடுகிறவர்?

எழுந்தார். அசல் தீர்மானத்தையே தாம் எதிர்க்கிறதாகக் கூறி சபையிலே ஒரு 'வெடி குண்டை' வீசினார். எல்லோரும் திடுக்கிட்டார்கள். தீர்மானத்தை எதிர்த்துப் பேசவும் பேசினார். பேசும்போது தாம் திருத்தப் பிரேரணையில் என்னென்ன கருத்துக்களைச் சொல்லவேணுமென்று இருந்தாரோ அவைகளை இன்னும் பத்து பங்கு காரசாரத்தோடு சொல்லியே தீர்த்தார்.

சத்தியமூர்த்தி செய்த தந்திரத்தை சிறிது நேரத்தில் ஊகித்து விட்டார் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்.

"மிஸ்டர் சத்தியமூர்த்தி! இப்போது தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று விஷமமாகக் கேட்டார் சேலம் தலைவர்.

"இப்போதா? தெரியவில்லையா? நான் நின்று பேசிக்கொண்டிருக்கிறேன்" என்று பட்டென்று பதிலளித்தார் சத்தியமூர்த்தி. ஹாஸ்யமான அந்த பதிலுக்கு சபையில் ஏற்பட்ட ஆரவாரத்தையே உற்சாகமாகக் கொண்டு சத்தியமூர்த்தி தமது கட்சியை சொல்லியே தீர்த்தார்.

சமயத்திற்குகந்த பிரசங்க வன்மைகள் சத்தியமூர்த்தியோடு உடன் பிறந்திருந்தவை. இப்போதும் தான் டில்லி அசெம்பிளி நடக்கின்றது. "சத்தியமூர்த்தி இல்லையே" என்று சர்க்கார் கட்சி ஆட்கள்கூட அங்கே தினம் நாலைந்து தடவை நினைக்கின்றார்களாம்.

போர் வந்து விட்டதென்ருல் பீமசேன னுக்கு பதினுயிரம் யானை பலம் உடனே வந்து விடுமாம். பிரசங்கம் செய்ய வேண்டிய சந்தர்ப் பம் வந்து விட்டால் சத்தியமூர்த்திக்கு அப்படித் தான். பார்லிமெண்டு முறைபற்றி 'மே' என்பவர் எழுதிய புத்தகத்திலின்று நேற்று சர்க்கார் விடுத்துள்ள ஒரு அபத்த அறிக்கை வரை காளிதாஸன் பவபூதி பாடிய சுலோகங்களினின்று பாரதியார் பாட்டு வரை சகல விஷயங்களும் வரிசை வரிசையாக அவர் உள்ளத்தில் வந்து காத்துநிற்கும்.

எதிர்க்கிறவர்களைத் தாக்கிப் பேசுவதில் அசகாய சூரன் சத்தியமூர்த்தி, "அட! டமாரம் அடிக்கிற பையா" என்று ஒரு எதிரியை, டார்பிடோ பண்ணுவார். "எங்கள் தலைவருடைய பூட்ஸைக் கழற்றுவதற்கு உனக்கு யோக்யதை உண்டா?" என்று இன்னொரு எதிரி மீது டாங்கியைச் செலுத்துவார். "அரசியலில் கிரேடா கார்போபோல மேனுமினுக்கித்தனம் பண்ணுகிருயா?" என்று இன்னெருவர் மீது டைம் பாம் போடுவார். தாக்கிப் பேசும்போது தயவாவது தாட்சண்யமாவது. "இன்றைக்கு சத்திய மூர்த்தி வாயில் அகப்பட்டு புறப்படாதிருக்க வேணுமே" யென்று எதிர்க்கட்சியினர் அவரவர் இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தித்து விட்டுத் தான் சட்ட சபைக்குள் பிரவேசிப்பார்களாம்.

சாதாரணமாக நம்மோடு பழகும் நண்பர் சத்தியமூர்த்தி வேறு,பிரசங்க மேடையில் நிற்கும் சத்தியமூர்த்தியே வேறு என்று தான் அனைவருக்கும் தோன்றும்.

பாஞ்சாலத் தலைவர் லாலா லஜபதிராயிடம் சத்தியமூர்த்திக்கு அபாரமான மதிப்பு உண்டு.

ஆனால் ஒரு தடவை சுயராஜ்யக் கட்சிக்கு விரோதமாக லாலா லஜபதிராய் பிரசாரம் ஆரம்பிக்கவே தெற்கே சத்தியமூர்த்தி அவரைக் கண்டிக்கப் புறப்பட்டு விட்டார். ஒரு கூட்டத்திலே "ரவி நதிக் கரையிலே ஒரு காக்கை உட்கார்ந்து கொண்டு கரைகின்றது" என்று லஜபதியை வெகு ஏளனமாகப் பேசிவிட்டார்.

சத்தியமூர்த்தி இவ்வளவு ஆத்திரத்தோடு தேசத்தின் தலைவரின் ஒருவரைப் பேசலாச்சா வென்று சிலர் கோபித்தனர். நேரே அவரிடம் சென்று "அப்பேர்ப்பட்ட பெரியவரை காக்கை யென்றும் கோழி யென்றும் நீர் சொல்லலாமா?" என்று கேட்டனர். சத்தியமூர்த்தி வெகு சாவதானமாக "அப்பன்களே! உங்களுக்கு லஜபதியிடம் எவ்வளவு பக்தியோ அதைப்போல குறைந்த பட்சம் பத்துப் பங்கு விசுவாசமும் பக்தியும் எனக்கு உண்டு. போய் வாருங்கள்" என்று கூறி அனுப்பி விட்டார்.

சில மாதங்கள் கழித்து தேசத்தின் பீடை போல ஸைமன் கமிஷன் வந்தது. லஜபதிராய் தமது கட்சி பேதங்களை மறந்து எல்லா தேச பக்தர்களோடும் ஒத்துழைத்தார். அப்போது பார்க்கணுமே சத்தியமூர்த்தியின் ஆனந்தத்தை, "தேசத்தின தவப்புதல்வன் அதோ லாகூரிலே சிம்மக் கோலத்தில் நிற்கின்றான்!" என்று கம்பீரமாக லஜபதிக்கு புகழுரைகள் கூறினார். தேசத்தின் மானத்தைக் காப்பதற்காக லஜபதி ராய் ஸைமன் கமிஷனை எதிர்த்ததும், பிறகு அந்தப் போராட்டத்தில் தமது உயிரையே அர்ப்பணித்ததும் அற்புதமான தியாக சரித்திரம். அந்த பிராணத் தியாகியின் அருமை பெருமைகளைப் பற்றி அநுதாபக் கூட்டங்களிலே சத்திய

மூர்த்தி செய்த பிரசங்கங்கள் காவியச் சுவை ததும்பியவை. சோக சிகரங்கள் ஒவ்வொரு வார்த்தையும்.

சத்தியமூர்த்தியின் துணிச்சல் பேச்சுக்காகவே அவரிடம் தமிழ் வாலிபர்களுக்கு ஒரு கவர்ச்சி. தமிழ் அரசியலிலே எத்தனையோ விதத் தலைவர்களைக் கண்டிருக்கிறோம். கண்டு கொண்டுமிருக்கிறோம்.

தொண்டர்களென்றால் தொண்டு செய்வதற்கே பிறந்தவர்களென்று அவர்களை அலட்சியமாக நடத்தும் தலைவர்கள் உண்டு. இன்னொரு தலைவர் வீட்டு வாசலிலே கோயமுத்தூர் தொண்டரும் திருநெல்வேலித் தொண்டரும் காலையிலிருந்து முற்றுகை போட்டிருப்பார்கள். தலைவர் நடுப்பகல் வரை தரிசனம் தராதிருந்து விட்டு சட்டென்று வெளியே வந்து காரிலேறிக் கொண்டு விர்ரென்று போய்விடுவார். அப்படி தலைவர் ரகமொன்று: மற்றொரு தலைவர் ரகம் வந்தவர்கள் யாராயிருந்தாலும் சரி அவர்கள் எதிரிலேயே ஆரஞ்சுப் பழத்தை உரித்து உரித்து குளோஸ் பண்ணிக் கொண்டிருப்பார் 'இந்தா அப்பா! என்று ஒரு சுளைகூடத் தரமாட்டார். ஆனால் சத்தியமூர்த்தி, மேலே சொன்ன தலைவர்களினத்தில் சேர்ந்தவரன்று. வந்தவர்களுக்கெல்லாம் விருந்தோம்பல் செய்யக்கூடிய செல்வநிலையை பராசக்தி அவருக்குத் தரவில்லை. ஆயினும் அவரோடு நெருங்கிப் பழகிய நூற்றுக் கணக்கான தமிழ் நாட்டுத் தொண்டர்களில் ஒவ்வொருவரும் அவர் வீட்டில் ஒரு கப் காப்பியாவது சாப்பிட்டிருப்பார்கள் என்று சொல்லலாம். அந்த தொண்டர்களை யெல்லாம் அன்பர்களென்று தான் பாராட்டுவார் சத்தியமூர்த்தி. ஏக வசன

மாக அவர் அழைத்துப் பேசுவதிலேயே ஒரு அன்பு குழைந்து நிற்கும். இப்பேர்ப்பட்ட அன்பு கனிந்த தலைவரோடு பழகிய தொண்டர்கள், அவரை எப்படி மறப்பார்கள் ?

சத்தியமூர்த்தி காலமாகி விட்டார். அவரது புத்திரிக்கு மாம்பலத்தில் திருமணம்: ஒரு கோடீஸ்வரன் வீட்டில் கூட நடத்த முடியாதபடிக்கு அவ்வளவு ஒழுங்காக வருகிறவர்களை விரைவாக வீட்டில் விசாரிக்கிறார்கள். அழகு பெற அந்தத் திருமணத்தை நிர்வகித்தவர்கள் யாரென்று நினைக்கிறீர்கள். விருதுங்கரிலிருந்து வந்த ஒரு தொண்டரும், திருமங்கலத்திலிருந்து வந்த இன்னொரு தொண்டரும், கோயமுத்தூரிலிருந்து வந்திருந்த இன்னொரு சீடரும் என்று ஜாப்தா நீளும். தலைவன் மறைந்து போனாலும் அவனிடம் தாங்கள் கொண்டிருக்கும் அத்யந்த அன்பைக்காட்ட காணிக்கை செலுத்த வந்த தூய இதயம் படைத்த சீடர்களே அவர்கள்.

தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியில் தொடர்ச்சியாகப் பலதடவை சத்தியமூர்த்தி தலைவராயிருந்ததற்கு முக்கிய காரணம் அவருக்கு அத்யந்த சிஷ்யவர்க்கம் தமிழ் நாடு பூராவும் வியாபித்திருந்ததேயாகும். சத்தியமூர்த்தி ஒரு ஸ்விட்ச் போர்டை அமுக்கினால் உடனே தமிழ் நாட்டின் பல நகரங்களினின்றும் அவருக்கு பலம் கொடுக்க 'மெய் காப்பாளர்கள்' போல வாலிபர்கள் இருந்தார்கள். அவ்வளவு அத்யந்த அன்பு கொண்ட சிஷ்யவர்க்கம் வேறு எந்தத் தலைவருக்குமே வாயத்ததில்லை யென்றுகூடச் சொல்லலாம்.

அந்த வாலிபர்களுக்கோ சத்தியமூர்த்தியின் சக்தியின் பேரிலும் • புத்தியின் பேரிலும் அபார

மான நம்பிக்கை. ஸ்வராஜ்யம் வந்து இந்தியக் குடியரசின் தலைவனாகவோ பிரதம மந்திரியாகவோ வரக்கூடிய சக்திவந்தரான தலைவர் தென்னாட்டில் சத்தியமூர்த்தி தான் என்பது அந்த பக்தர்களின் நம்பிக்கை. ஆனால் 'தேச சேவை' என்ற கானல் நீரின் சேஷ்டைகளைப் பாருங்கள், சத்தியமூர்த்தி ஒரு மாகாண மந்திரியாகக்கூட பதவி ஏற்காமல் நம்மை விட்டு மறைந்து விட்டார்.

பதவிகள் மீது அவருக்கு அதிக விருப்பம் தான்! ஆனால் வாஸ்தவமாகப் பதவிகளுக்குப் போட்டியிட்டு அதிலே காங்கிரஸ் அன்பர்கள் வேறுவிதமாக ஒரு முடிவு செய்து விட்டார்களானால் அதற்காக சத்தியமூர்த்தி மனம் குழம்பிப் போனதே கிடையாது. கிரிக்கெட் மைதானம் போலவே அரசியல் போட்டா போட்டிகளை அவர் மதித்து வந்தார்.

பல வருஷங்களுக்கு முன்னே மதுரையிலே ஒரு மாகாண மகாநாடு. ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் தலைவராவதா, சத்தியமூர்த்தி தலைவராவதா என்று பலத்த போட்டி. முடிவில் ராஜகோபாலாச்சாரியார் பெயர் தேர்ந்தெடுக்கப் பட்டது. அந்த முடிவுக்காக சத்தியமூர்த்தி அரசியல் சந்நியாசம் கொண்டு ஓடிப்போகவில்லை. அடுத்த வருஷத்தில் சத்தியமூர்த்தி செய்த தேச சேவைகள் தான் அபாரமாயிருந்தது. 1936-ம் வருஷத்தில் வேலூரிலே இதே மாதிரி ஒரு சம்பவம். அந்த வருஷம் ஸ்ரீ முத்துரங்கமுதலியார் மாகாணத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சத்தியமூர்த்தியை மாகாணக் கமிட்டி காரியதரிசியாகத் தேர்ந்தெடுத்தார்கள். அதற்காக சத்தியமூர்த்தி கோபிக்கவில்லை. இதுவரை தமிழ்

மாகாண கமிட்டி காரியதரிசிகள் எத்தனையோ பேர் இருந்திருக்கிறார்கள். சத்தியமூர்த்தி காரிய தரிசியாக இருந்த வருஷத்தில் வேலைகள் நடந்தது போல எந்த ஆண்டும் நடந்ததில்லை.

திருவல்லிக்கேணியில் அவரது வீட்டிலேயே ஒரு சிறிய கமிட்டித் தேர்தல் நடந்தது. விஷம மாக அவரை அந்தத் தேர்தலில் தோற்கடிப்பதில் முயன்ற விஷமிகளில் நானும் ஒருவன். அன்று அந்த தேர்தல் அப்படி முடிந்ததற்காக எங்கள் மீது சத்தியமூர்த்திக்கு கோபம் ஏற்பட்டதில்லை. எதிரியிடம்கூட 'சமத்து' இருக்குமானால் அதைப் பாராட்டும் குணம் சத்தியமூர்த்திக்குத் தான் இருந்தது.

மேலே சொன்ன சம்பவங்களைப் போல நாலைந்து சந்தர்ப்பங்களைத் தவிர, இன்னும் ஆயி ரம் சம்பவங்கள் இருக்கலாம். அவைகளில் சத் தியமூர்த்தி போட்டி போட்டு ஜெயித்தே தானிருக்கிறார். பிரசங்கம் என்றால் சத்திய மூர்த்திக்கு ஒரு களிப்பு! தேர்தல் என்றாலோ எக்களிப்பு !!

இந்தியாவின் அரசியல் வாழ்வில் தமிழ் நாட்டுக்கு கீர்த்தி தேடித் தந்து கொண்டிருந் தவர் ஸ்ரீ சத்தியமூர்த்தி. ஹிமாலயச் சரிவில் ஆர்யகுருகுல பட்டமளிப்பு விழாவில் பேசும் போதும் சரி, டில்லி அசெம்பிளி மண்டபத்தில் கேள்வி மழையைப் பொழியும் போதும் சரி, பம்பாய் சினிமா முதலாளிகள் சங்கத்திலாகட் டும், கல்கத்தா சித்தரஞ்சன் அவென்யுவில் ஆகட் டும் தமிழ் நாட்டின் தனிச் சிறப்பையும் உயர் வையும் பற்றி வடநாட்டு மக்களிடை சங் கோஜமின்றி எடுத்துக் கூறிவிட்டுத் தான் திரும்

புவார். அந்த ஒரு காரணத்துக்காகவே அவரிடம் அன்பு கொண்டிருந்த தமிழ் வாலிபர்களும் உண்டு.

தமிழ்நாடு மட்டுமல்ல. தமிழ் மொழியிடம் அவருக்கு ஒரு தனிமதிப்பு. நமது மாகாணத்திலே பள்ளிகளில் பாடங்களைத் தமிழ் மூலமே போதிக்க வேணுமென்ற இயக்கத்தைத் தொடங்கியவரும் சத்தியமூர்த்தியே. அதை சர்வகலாசாலையில் நிறைவேற்றி வைத்தவரும் சத்தியமூர்த்தியே. அரசியல் ஞானத்தை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டுமெனில் ஆங்கிலத்தில் தான் சாத்யம் என்று அநேகருக்கு நினைப்பு. ஆனால் சத்தியமூர்த்தியோ ஆங்கிலத்தில் எப்படி ஒரு தனி பாணியில் பிரசங்கம் செய்து வந்தாரோ அதே மாதிரி தமிழிலும் அழகாகப் பிரசங்கங்கள் செய்து வந்தார்.

தமிழ் நாட்டுக்கு கீர்த்தி தேடிய அதே தோரணையிலேயே இந்தியாவின் கீர்த்தியைப் பிற நாடுகளில் பரப்புவதிலும் அவருக்கு ஆசை. அவர் இங்கிலாந்துக்குச் சென்றிருந்த போது லண்டன் ஹைட்பார்க் போன்ற இடங்களில் இந்திய சுதந்திர இயக்கம் பற்றி செய்த பிரசங்கங்களை ஆங்கிலேயர்களே அக்காலத்தில் பாராட்டியதுண்டு. எந்த சபையிலும் இந்தியாவை இளப்பமாகப் பேசுவதை சத்தியமூர்த்தியால் சகிக்க முடியாது.

ஹிட்லரின் பொருளாதார மந்திரி டாக்டர் ஷாட் சில வருஷங்களுக்கு முன் சென்னைக்கு வந்திருந்தார். அவருக்கு சென்னை வர்த்தகர்கள் ஒரு விருந்து வைத்தார்கள். டாக்டர் ஷாட் தமது தலைவரான ஹிட்லரின் அருமை பெருமைகளை வானளாவப் புகழ்ந்தார். அங்கிருந்த சத்திய

மூர்த்தியைப் பிறகு பேசச் சொன்னார்கள். அந்த டாக்டர் ஷாட் வெட்கித் தலைகுனியும்படி "உலகமே கண்டிராத அற்புதத் தலைவன் இப்போது இந்தியாவில் தான் பிறந்திருக்கிறார். அவர்தான் மகாத்மா காந்தி, உலகில் வேறு எந்த தலைவருமே அவருக்கு சமானமில்லை" என்று வாசமகோசரமாக சத்தியமூர்த்தி செய்த பிரசங்கத்தைக் கேட்டு டாக்டர் ஷாட் பிரமித்தே போனார்.

இவ்வாறு மூன்று தலைமுறைகளுக்கு இடைவிடாது அரிய சேவை செய்த தலைவர் சத்தியமூர்த்தி. அவரைவிட சக்தியில் குறைந்தவர்கள், அவரிடமே தோற்று ஓடியவர்கள் எல்லோரும் எங்கேயோ 'சேவக விருத்தி'களில் ஈடுபட்டு லட்சம் லட்சமாக சம்பாதித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் சத்தியமூர்த்திக்கோ உயிர் பிரியும் வரை தேசமே அவரது ஞாபகம். அவர் சேவை செய்த காலத்திலே தமிழ் மக்களின் ஞாபகமத்தனையும் சத்தியமூர்த்தியைப் பற்றியே தான். அரசியல் எதிரிகளுக்குக்கூட சத்தியமூர்த்தியைத் தாக்கி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொன்னால் தான் ஆத்ம திருப்தி, அப்படி அவரது கீர்த்தி எங்கும் வியாபித்திருந்தது. அநேகருக்கு இலக்கியமென இருந்தது அவரது வாழ்க்கை.

கோபால கிருஷ்ண கோகலே மரணத் தருவாயில் சரோஜினி தேவியிடம் பின் வருமாறு சொன்னாராம். "அம்மா! எனது காரியங்கள் முடிந்து விட்டன. இனி நான் விட்டுச் சென்றுள்ள காரியங்களில் பாக்கியும் நிறைவேறும் வரை நீ அரசியலிலேயே சேவை செய்து கொண்டிருப்பாயாக" என்றாராம். சத்தியமூர்த்தியின் ஆத்மாவும் தமிழ் வாலிபர்களுக்கு அப்படித்தான் ஆக்ஞையிட்டுக் கொண்டிருக்கிறது.

# நாணயமான அரசியல் வாதி

என். ராமரத்னம்

[பதவி ஏற்கும் காலத்தில் மட்டும் தீவிர காங்கிரஸ்காரர்களாக சிலர் இருப்பார்கள். போராட்டம் ஆரம்பமானவுடன் அவர்கள் இருக்குமிடம் தெரியாது. சிலர் போராட்ட காலத்தில் மாத்திரம் காங்கிரஸுக்கு தொண்டாற்ற முன் வருவார்கள். பின்வகையில் சேர்ந்தவர் ஆசிரியர் ஸ்ரீ ராமரத்னம். சிறை என்றால் பயமற்றவர். இக் கட்டுரையில் போராட்ட காலத்திலும் பதவி ஏற்கும் காலத்திலும் சலியாமல் உழைத்த சத்திய மூர்த்தியின் அரசியல் நேர்மையை பற்றி ஸ்ரீ ராமரத்னம் 'பாரததேவி' பத்திரிகையின் 'ஊர்வம்பு' பகுதியில் எழுதியுள்ள கட்டுரை இது.]

"சத்யமூர்த்தி மகா மேதாவி. பார்லிமென்டரி முறைகளில் அபார சாமர்த்தியசாலி. நல்ல அறிவாளி" என்றெல்லாம் பலர் அவருக்கு புகழ்மாலைகள் சூட்டுகிறார்கள். அவர் உயிருடனிருந்த காலத்தில் அவருக்குப் பாராட்டுகளைவிட வசைகள்தான் அதிகமாய்க் கிடைத்துக் கொண்டிருந்தன. மேடை மீதேறி 'வந்தே மாதரம்' என்ற வார்த்தைகளைச் சொல்லுவதைத் தவிர

வேறெதுவும் அறியாதவர்கள்கூட, சத்யமூர்த்தி யைத் திட்டுவதென்ருல் வரிந்து கட்டிக் கொண்டு வருவார்கள். இதைக் கண்டு சத்திய மூர்த்தி பல சமயங்களில் மனம் புண்ணடைந் திருக்கிருர். அவர் இறந்த பிறகாவது அவரைப் பற்றி நாலு வார்த்தை நல்லது சொல்லுவதற்கு நண்பர்கள் இருப்பது சந்தோஷப் படவேண்டிய விஷயம்தான்.

சத்தியமூர்த்தி அரசியல் கொள்கைகளில் அவ்வளவு கண்டிப்பானவர் அல்ல என்று சிலர் சொல்லுவதுண்டு. இந்தியாவில் அரசியல் என் பது ஒரு போர் முறைதான். சில சமயங்களில் விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும். அம்மாதிரி சமயங்களில் சத்தியமூர்த்திதான் முதலில் கொடி யைத் தூக்கிக்கொண்டு புறப்படுவார். பக்கத்தி லிருப்பவர்கள் கல்லேயும், மண்ணேயும் வாரி இறைப்பார்கள் அதற்கெல்லாம் அவர் அஞ்சுவ தில்லே. அவருடைய முயற்சியின் பலன்களே அனுபவிப்பதற்கு எவ்வளவோ பேர் தயாராக இருப்பார்கள். ஆனல், வசவும், திட்டும் வாங் கிக் கொள்வதற்கு சத்தியமூர்த்திதான் பிறந்தார்.

"சத்தியமூர்த்தி லஞ்சம் வாங்குகிருராமே" என்று போகிற போக்கில் சிலர் சொல்லிவிட்டுப் போய் விடுவார்கள். இதை அவரிடமே நேரில் ஒரு தரம் சொன்னேன். அவர் கொஞ்சம்கூட என்மீது கோபப்படவில்லே. நிதானமாக பதி லளித்தார்.

"நாள் பூராவும் வேலே செய்ய வேண்டும். எங்கேயாவது பஞ்சாயத்து தேர்தலென்ருல்கூட அதற்கு மேளம் வாசிப்பதற்கு சத்தியமூர்த்தி வரவேண்டும். நான் பணக்காரனில்லே. நான் எப்படி சாப்பிடுவது? இந்த நாட்டில் அரசியல்

வாதிகளுக்காக 'கார்னீஜி நிதி'யா வைத்திருக்கிறீர்கள்? தேர்தல் தம்பட்ட மடித்துவிட்டு நானும் என் குடும்பத்தினரும் வாயு பக்ஷணம் செய்ய முடியுமா? லஞ்சம் யாரிடம் வாங்குகிறேன்? வெள்ளைக்காரனிடம் பணம் வாங்கிக் கொண்டு, அல்லது பட்டம் பதவி வாங்கிக் கொண்டு என் தேசத்தைக் காட்டிக்கொடுத்து விட்டேனா? யாராவது ஒரு பணக்காரனுக்கு அசெம்பிளியில் ஒரு கேள்வி கேட்கவேண்டியிருக்கும். அவனிடம் பணம் இருக்கிறது. என்னிடம் கேள்வி கேட்கும் திறமை இருக்கிறது. எப்போதாவது இதைச் செய்தால், இது லஞ்சமாகுமா? ஒரு மனிதன் பிடிக்கவில்லையென்றால் அவனைத் தூற்றுவதற்கு ஒரு அளவு கிடையாதா?" என்று சத்தியமூர்த்தி பதில் சொன்னார்.

தன்னைப் பிறர் திட்டுகிறார்கள் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். அதைக் கண்டு அவர் வருந்துவாரேயொழிய கலங்கிவிடமாட்டார். சிலரைப்போல் எதிர்ப்பைக் கண்டு அவர் சீறி விழுபவரல்ல. எதிர்ப்பு அதிகமாக ஆக அவருடைய உத்ஸாகமும் அதிகமாகும்.

மாகாண அசெம்பிளி தேர்தல்களுக்குமுன் ஜவாஹர்லால் (பிரஸிடென்ட்) சென்னைக்கு வந்திருந்தார். திருவல்லிக்கேணி கடற்கரையில் பொதுக்கூட்டம் நடக்கிறது.

"காங்கிரஸ் மகாசபையில் பதவி ஏற்புத் தீர்மானம் வந்தால் என் செல்வாக்கு, பலம் யாவற்றையும் உபயோகித்து அதை எதிர்ப்பேன்" என்று ஜவாஹர்லால் கர்ஜித்தார். கடைசியில் சத்யமூர்த்தி பேசினார்.

"பண்டிட்ஜிக்குள்ள செல்வாக்கு எனக்குக் கிடையாது. ஆனால் நானும் என் பூராபலத்தை யும் உபயோகித்து பதவி ஏற்புக்குப் போராடு வேன்" என்றார். நேருவைப் பக்கத்தில் வைத் துக்கொண்டு இந்தமாதிரி பேசுவதற்கு அப் போது வேறு யாருக்கும் இவ்வளவு தைரியம் கிடையாது.

அல்ப புத்தியுள்ளவர்கள் சத்ய மூர்த்தியைத் திட்டலாம். ஆனால் மனதில் தோன்றியதை பகிரங்கமாகச் சொல்லுவதில் அவரைப் போன்ற நாணயமான அரசியல் வாதிகள் ரொம்ப சொல் பமே. அவருடைய கட்சி ஏற்றுக் கொள்ளப் படாவிட்டால் 'காங்கிரஸை விட்டுப் போய்விடு வேன், காங்கிரஸைத் தொலைத்துவிடுவேன்' என்று சொல்லும் அகம்பாவம் அவரிடம் இல்லை. கடைசி வரையில் காங்கிரஸின் ஊழியராகவே இருந்து அவர் பிராணனை விட்டார். மனிதர்கள் மறந்தாலும், நாட்டுக்கு அவர் செய்துள்ள சேவையை சரித்திரம் மறக்க முடியாது.

---

## அவன்தோல் வெளுப்பாம்!
## என்தோல் கருப்பாம்!

"ஒரு உத்தியோகத்தை ஆங்கிலேயன் பார்த்தால் அவனுக்கு ரூ. 2000 சம்பளம். அதே உத்தியோ கத்தை நான் பார்த்தால் எனக்கு எண்ணூறு ரூபாய் தான் சம்பளம். இந்த வித்தியாசம் எதனால் தெரி யுமா? அவன் தோல் வெளுப்பாம்! என்தோல் கருப் பாம்!"

—சத்தியமூர்த்தி.

# சத்தியமூர்த்தியும் நானும்

## மகாகனம் எம். ஆர். ஜயகர்

[பழுத்த மிதவாதி எம். ஆர் ஜயகர் தனக்கும் சத்தியமூர்த்திக்குமுள்ள உறவுகளைப் பற்றி இக் கட்டுரையில் விவரித்திருக்கிறார். உண்மையில் இது கட்டுரை அல்ல. சென்னை மகாஜன சபையில் 1943 டிசம்பர் 29உ சத்தியமூர்த்தியின் படத்தை திறந்து வைத்த பொழுது செய்த பிரசங்கம்.]

"1941-ல் நான் தியாகராயநகரில் ஸ்ரீ சத்தியமூர்த்தியை சந்தித்த பொழுது 2 வருஷங்களுக்குள் அவர் நம்மை விட்டு பிரிந்துவிடுவார் என்பதை நான் எதிர்பார்த்ததில்லை.

ஹோம் ரூல் லீக் காலத்தில் எனக்கு அவரைத் தெரியும். அப்பொழுது அவர் டாக்டர் அன்னிபெஸண்ட் அம்மையாரின் 'ஹோம் ரூல்' இயக்கத்திற்கு ஆதரவு தேடுபவராக வந்தார். அப்பொழுது பம்பாயில் ஜின்னா 'ஹோம் ரூல் லீக்'கின் காரியதரிசியாகவும் நான் தலைவராகவும் இருந்தோம். பின்னர் ஸ்ரீ சத்தியமூர்த்தி பெஸண்டை குறைகூற ஆரம்பித்து விட்டார். ஆனால் அது வேறு விஷயம்.

சுயராஜ்யக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. பம்பாயில் அவர் தலைமை வகிக்கும் கூட்டத்தில்

நான் பிரசங்கம் செய்வதும், நான் தலைமை வகிக்கும் கூட்டத்தில் அவர் பிரசங்கம் செய்வதுமாகப் பிரசாரம் செய்துக் கொண்டு போனோம்.

ஆதரவு இல்லாத ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டு அதற்கு ஆதரவு கிடைக்கும் வரையில் ஸ்ரீ சத்தியமூர்த்தி போராடுவார். அது அவரிடமிருந்த ஒரு பெரிய குணம். அந்தக் காலத்தில் அவர் ஸ்வராஜ்யக் கட்சிக்கு ஆதரவுதேட பஞ்சாபுக்கு அனுப்பப்பட்டார். நான் வங்காளத்திற்குச் சென்றேன். நானும் அவரும் பங்காளிகள் போல் சண்டை போட்டுக் கொள்வோம். சண்டை நேச முறையில் கடுமையாக நடக்கும்.

பெருந்தன்மையான குணங்களை யுடையவரும் சட்ட சபை விஷயங்களில் பொய்களை வெறுப்பவரும் அவரைப் போல் வேறு யாரையும் நான் பார்த்ததில்லை. சட்டசபையில் சர்க்காரின் தவறுகளையும், நடிப்புகளையும் வெளிப்படுத்துவதில் அவர் மேதாவி. சுயராஜ்யக் கட்சிக்கும் பின்னர் காங்கிரஸ் கட்சிக்கும் ஒரு பெரிய தூண் போன்றவர். ஸ்ரீ சத்தியமூர்த்தி மெம்பராக இருந்த அசெம்பிளியில் இருக்க நான் கொடுத்து வைக்கவில்லை.

அப்பொழுது மாறுமல் இருந்தவர்கள் எல்லாரும் கூட இப்பொழுது பெரிய மாறுதல்களுக்குள்ளாகி விட்டார்கள். இதுதான் காலத்தின் நியதி. நான் சொல்வதை தப்பர்த்தம் செய்துக் கொள்வது கூடாது. காலத்திற்கும் நிலைமைக்கும் ஏற்றபடி அரசியல் மாறுகிறது என்பதைத்தான் கூறுகிறேன்.

தேர்தல் காலத்தில் மீண்டும் எனக்கு ஸ்ரீ சத்தியமூர்த்தியோடு தொடர்பு ஏற்பட்டது.

காங்கிரஸ் சார்பில் தேர்தலுக்கு நிற்கும்படி அவர் என்னைக் கேட்டார். நிபந்தனைகள் என் சுய மரியாதைக்கும் கொள்கைக்கும் ஏற்றார் போல் இருக்குமானால் அவர் இஷ்டப்படிச் செய்யத் தயார் என்றேன். காங்கிரஸ் டிக்கெட்டில் கையெழுத்துமட்டும் போடும்படி அவர் கூறினார். இது போன்ற கொள்கையை அனுஷ்டிப்பதால் காங்கிரஸுக்கு அதிக அபாயம் ஏற்படும் என்று கூறிவிட்டு டிக்கெட்டில் கையெழுத்து போட நான் மறுத்துவிட்டேன். டிக்கெட்டில் கையெழுத்து போடுவது ஒரு கொள்கையை ஒப்புக் கொள்வதே தவிர ஒரு வேலைத் திட்டமாகாது என்ற காரணத்தை முன்னிட்டு நான் கையெழுத்திட மறுத்தேன்.

சட்ட சபையில் இருக்கும் 5 வருஷ காலத்திற்கு ஒரு திட்டம் வகுத்துக்கொண்டு நம் கட்சியின் கீழ் எல்லா மாகாணங்களிலுமுள்ள சிறுபான்மையினருக்கும் திருப்தி ஏற்படும்படி செய்ய வேண்டுமென்றேன். தம் தலைவர்களைக் கேட்க வேண்டுமென்று ஸ்ரீ சத்தியமூர்த்தி சொன்னார். பின்னர் அவர்கள் ஒரு ஒப்பந்தத்திற்கு வரவில்லை. என் திட்டங்களில் சிலவற்றை ஒப்புக்கொண்டனர். வேறு சிலவற்றை ஒப்புக் கொள்ளவில்லை.

காங்கிரஸிடம் சத்தியமூர்த்திக்கு அதிக பக்தி யிருந்த போதிலும், அவருக்கும் எனக்கும் அதிக வித்தியாசம் இல்லை. அரசியலில் அவருடைய தாராள மனப்பான்மையை கௌரவிக்க வேண்டும். அரசியற் கொள்கைகள் விரோதத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை.

சகிப்புத் தன்மை என்பது நம் நாட்டிற்கே உரியவைகளில் ஒன்று. காங்கிரஸ் மறுபடியும்

பதவிக்கு வரும்பொழுது இதை மறந்துவிடக் கூடாது. மற்றவர்களுடைய கொள்கையையும் ஆலோசிக்க வேண்டும். நம் நாட்டு சரித்திரம் இதைத் தான் நமக்குப் போதிக்கிறது.

இரண்டு வருஷங்களுக்கு முன் சத்திய மூர்த்தி சிறையிலிருந்து வந்த பின் அவரைச் சந்தித்தேன். சிறை வாழ்க்கை அவர் உடலை சீர்குலைத்து விட்டது.

ஹிந்துப் பண்பாட்டிலும், சம்ஸ்கிருதத்திலும் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு அதிகப் பற்றுண்டு. சாதாரணமாக பெரிய தலைவர்களிடம் இந்த அம்சம் இருப்பதில்லை. பெருந்தன்மையுடன் எதிரிகளின் விஷயத்தை கவனிக்க வேண்டும் என்பன போன்ற உயர்ந்த லட்சியங்களுக்காகவே சத்திய மூர்த்தி வாழ்ந்தார்."

---

"நம்முடைய இலக்கியங்களில் வேடிக்கையும் தமாஷும் பொதிந்து கிடக்கிறது. ஆனால் பிற்காலத்தில் ஒருவிதமான மூட வைராக்யம் நமது சமூகத்தை பிடித்துக்கொள்ள நாம் க்ஷீணதசை யடைந்துவிட்டோம். நல்லவேளை. ஸ்ரீ சுப்ரமணிய பாரதியாரின் மேதையினால் தமிழர்கள் திரும்பவும் இந்தியாவின் அரசியல் வாழ்க்கையிலும், கலை வாழ்க்கையிலும் ஒரு உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்று வருகின்றனர். தமிழர்கள் தங்களைத் தாங்களே தாழ்வாகக் கொள்ளாமல் தங்களுக்குள் ஒற்றுமையை வளர்த்துக் கொண்டால் இன்னும் மேலான ஸ்தானத்தை யடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை."

—சத்தியமூர்த்தி.

# சத்தியமூர்த்தியின் பாரதி பக்தி

**நெ. பி. ஸ்ரீரங்கன்**

மஹாகவி சுப்ரமண்ய பாரதியாரின் பாடல்களும், ஸ்ரீ சத்தியமூர்த்தியின் பிரசங்களும் தான் தமிழ் நாட்டில் தேசபக்தியும், சுதந்திர ஆவேசமும் கிளம்பச் செய்தன. ஸ்ரீ பாரதியார் தமிழனின் ஜீவ நாடிகளில் தேசாபிமான ரத்தம் ஓடச் செய்த ஹிருதயம். அந்த ரத்தத்தை ஜஸ்டிஸ் கட்சி போன்ற துர்தாதுக்கள் தொடாமல் காத்த சுவாசப்பை ஸ்ரீ சத்தியமூர்த்தி.

பாரதியார் பாடல்களின் வேகத்தை ஸ்ரீ சத்தியமூர்த்தி அறிந்து கொண்டது போல் வேறு எவரும் உணரவில்லை யென்றுகூடச் சொல்லலாம். ஏனெனில், பிரசாரத்தின் மகிமை ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு நன்ருகத் தெரியும். ஆயிரம் பேர் சேர்ந்து பிரசங்கம் செய்தால்கூட ஊட்ட முடியாத ஓருணர்ச்சியை பாரதியாரின் ஒரே பாடலைப் பாடுவதால் உணர்ச்சியை ஊடுருவிப் பாயும்படி செய்யமுடியுமென்பதை நன்கறிந்தவர். அதனுல்தான் 1928 ஞ் செப்டம்பர் மாதம் 11 தேதி யன்று, பாரதியாரின் "தேசியப் பாடல்கள்" ராஜாங்கத் துவேஷமானவை என்று கூறும் பர்மா சர்க்கார் அறிக்கையை சென்னை கெஜட்டில் வெளியிட்டு, ஹிந்தி பிரசார் சபையிலும், சென்னையிலுள்ள புஸ்தகக் கம்பெனிகளுமிருந்த சுமார் 20,000 பிரதிகளை சென்னைப் போலீஸ் பறிமுதல் செய்தபோது ஸ்ரீ சத்திய

மூர்த்தியின் உள்ளம் துடித்தது. சென்னை சட்ட சபையில் போலீஸாரின் நடத்தையைக் கண்டித்து அவர் கொண்டு வந்த அவசரப் பிரேரணையும், அதையடுத்து அவர் செய்த பிரசங்கத்தின் தொனியும் அதற்குச் சான்று.

பர்மா அப்போது இந்தியாவிலிருந்து பிரிக்கப்படவில்லை. இந்தியாவின் மாகாணங்களில் ஒன்ருகவே பாவிக்கப்பட்டு வந்தகாலம். 1928 ஞு ஆகஸ்டு மாதம் 7 தேதி பர்மா சர்க்காருக்கு திடீரென்று ஞானோதய முண்டாயிற்று. பாரதியாரின் சுதேச கீதங்களில் சில ராஜத் துவேஷமானவை யென்றும், இ. பி. கோ. 124-ஏ பிரிவின் 'விஷம'த்திற்குட்பட்டது என்றும் முடிவு செய்தது. உடனே குறிப்பிட்ட பாடல்களைக் கொண்ட பிரதிகளை யெல்லாம் பறிமுதல் செய்யும்படி உத்தரவு பிறப்பித்தனர். அவ்வுத்திரவின் கீழ் நடவடிக்கை யெடுக்கும்படி சென்னை போலீஸைக் கேட்டுக் கொண்டது. சென்னை சர்க்கார் அப்போதைய அரசியல் சட்டத்தின் பிரகாரம் பர்மா சர்க்கார் உத்திரவை செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரித்து விட்டு, சென்னையிலிருந்த சுதேச கீதங்கள் பிரதிகளை யெல்லாம் பறிமுதல் செய்யும்படி போலீஸை ஏவி விட்டது. போலீஸ் படை சென்னையிலிருந்த 20,000 பிரதிகளையும் கைப்பற்றிச் சென்றது.

போலீஸ் இலாகாவின் இந் நடவடிக்கையைக் கண்டித்து, ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி சென்னை சட்ட சபையில் அவசரப் பிரேரணை கொண்டு வந்தார். அவர் அப்போது செய்த பிரசங்கம் மிகவும் உன்னதமானது. உலகப் பிரசங்களில் சிலாக்யமான தென்று சிலவற்றைத் தேர்ந்தெடுத்தால் அதில் ஒன்ருகச் சேர்க்கக்

கூடியது. ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த மலையாளி ஜனுப் ஷம்னுத் சத்யமூர்த்தியின் அரிய பிரசங்கத்தைக் கேட்டு, உணர்ச்சியூறியதால் பிரேரணையை ஆதரிப்பதாகக் கூறினர்.

"பாரதியார் அடிமை நாட்டில் பிறந்ததால், புதுச்சேரியில், பிரஞ்சு சர்க்கார் தயவில் வாழ வேண்டி நேர்ந்தது. மன முடைந்து உயிர் நீக்க வேண்டி வந்தது. இங்குள்ள சர்க்காரின் கீழ் தம்மால் யாதொரு பிரயோசனமுமில்லையென்று கண்டு, மனம் நொந்து, உயிர் நீத்தார். அவருக்கு முன் பல தியாகிகள், பல தேச பக்தர்கள் அதே கதியை அடைந்தனர். ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி தேச பக்தராக வாழ்ந்தார்; தேச பக்தராக வீழ்ந்தார்" என்று ஸ்ரீ சத்தியமூர்த்தி சட்ட சபையில் ஆத்திரத்துடன் கூறினர். இதே வாக்கியம் அவருக்கும் பொருந்தும்.

சபையினர் மனமுருகும்படி, 'கணவனை இழந்த அவரது விதவைக்கும், தந்தையற்ற இரு புத்திரிகளுக்கும் இப்புஸ்தகங்கள் தான் உணவளிக்கின்றன' என்பதை எடுத்துக் காட்டினர்.

தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொருவனும் பாரதியாரின் பாடல்களை மனப்பாடம் செய்து பாடும்படியாகப் பிரசாரம் செய்யப் போவதாகக்கூறிவிட்டு, "நீங்கள் எல்லா பிரதிகளையும் பறி முதல் செய்து விடலாம். ஒரு சிறு ஏட்டுப் பிரதிகூட இல்லாத எங்கள் தெய்வீக வேதங்களை புத்திர பௌத்திர பாரம்பரியமாக ஓதி வருவது போல, தமிழ் பாஷை உள்ளளவும், கடைசி தமிழன் ஒருவன் உயிரோடு உள்ளளவும் இப்பாடல்களை அரிய பொக்கிஷமாகத் திகழச் செய்வோம். அச்சிலுள்ள ஒவ்வொரு வரியையும் ஹோம் மெம்பரும், சட்ட மெம்பரும், பறி முதல்

செய்து விடலாம். ஆனால் சிந்தனையையும், ஞாபக சக்தியையும் பறிமுதல் செய்யும் கருவியை மனிதனுடைய யுக்தியால்கூட இன்னும் கண்டு பிடிக்க முடியவில்லை. நிர்வாக சபை மெம்பர்கள் செல்லுமிடமெல்லாம், அவர்கள் செவிகளில் பாரதியாரின் பாட்டுகள் மட்டும் ஒலிக்கும்படி செய்யப் போகிறேன்" என்று எச்சரிக்கையும் விடுத்தார்.

அக்காலத்தில் சென்னையில் இரட்டை யாட்சி அமுலிலிருந்தது. நிர்வாக சபையும், மந்திரி சபையும் ஏக காலத்தில் ஆட்சி புரிந்து வந்தன. போலீஸ் இலாகா ஹோம் மெம்பர் ஸர் உஸ்மானிடமும், சட்ட இலாகா சட்ட மெம் பர் ஸர் எம். கிருஷ்ணன் நாயரிடமும் இருந்தன. பறிமுதல் நடவடிக்கைக்கு இவர்கள் தான் காரணம். ஆனால் அப்போது முதன் மந்திரியாகவும். கல்வி மந்திரியாகவு மிருந்த டாக்டர் சுப்பராயன் இப் பாடல்களை ஸ்கூல்களில் சொல்லிக் கொடுக்க அனுமதித்திருந்தார். இதைப் பற்றி பரிகசித்து, "இப் புஸ்தகங்கள் நமது சிறுவர்களுக்கு ஞானத்தை ஊட்டி, அவர்களை கௌரவமான பிரஜைகளாக வளர்க்கக்கூடியவை யென்று முதல் மந்திரி கருதுகிறார். ஆனால் நிர்வாக சபைக்கு வரும்போது அவை பறிமுதல் செய்யக்கூடியவை ஆகிவிடுகின்றன" என்று கூறியபோது சபை பூராவில் சிரிப்பில் மூழ்கியது.

உடனே சத்தியமூர்த்தி மூன்று புஸ்தகங்களைக் கையிலெடுத்து, அவற்றை சட்ட மெம்பருக்கும், ஹோம் மெம்பருக்கும், சட்ட சபை லைப்ரெரிக்கும் பரிசளிக்கப் போவதாகக் கூறினார். பாரதியாரின் கீதங்களையும், மேனாட்டுக் கவிஞரின் கவிதைகளையும் படித்துக் காட்டினார். மன்னர்

வாழ்த்துப் பாடலையும், பாரதியாரின் தேச வாழ்த்துப் பாடல்களையும் ஒப்பிட்டு, சுடுசரம் போன்ற சில வார்த்தைகளைச் சொன்ன போது ஐரோப்பியர் முகம் சுண்டியதாம். இங்கிலீஷ்காரர்கள் தாங்களே வாழவேண்டுமென்கிற கொள்கையுடையவர்களென்றும் கூறினர். ஆனல் பாரதியாரின் சித்தாந்தம் எல்லா ஜாதிக்கும், எல்லா நாட்டினருக்கும் பொதுவானது என்பதை எடுத்துக் காட்டினர்.

பிரசங்கத்தின் முடிவில், "தமிழ் ஜாதியினரின் இலக்கிய மேதைக்கே இது சவால் ஆகும். எவரெவருக்குத் தமிழ் தாய் பாஷையோ அவர்கள் சுயமதிப்புக்கே சவால் ஆகும். இங்கும், இதர இடங்களிலுமுள்ள தேசாபிமானம் படைத்த ஞான சுதந்தரத்தையும், தேச பக்தியையும் உயர்வாகக் கருதும் பிரஜைகளுக்கே சவாலாகும்" என்று கூறினர்.

ஸ்ரீ சத்தியமூர்த்தியின் பிரசங்கம் எல்லா கட்சியினரையும் பிரேரணையை ஆதரிக்கும்படி செய்தது. 76 பேர் பிரேரணையை ஆதரித்தனர். 12 பேர் எதிர்த்தனர். நடுநிலைமை வகித்த 15 பேரும் தீர்மானத்தை ஆதரிக்க முடியாததால் தான் நடுநிலைமை வகித்தனர்.

இப்போதும் அதே மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஸ்கூல்களில் பாரதியாரின் பாடல்களைப் பாடக்கூடாதென்று சென்னை கவர்னர் சர்க்கார் உத்திரவிட்டது தமிழருக்கு ஞாபகமிருக்கலாம். அவ்வுத்திரவை மாற்றும்படி செய்வதுதான் ஸ்ரீ சத்தியமூர்த்திக்குச் சிறந்த ஞாபகச் சின்னமாகும். ஸ்கூல்களில் சிறுவர்களின் குரலில் எழும் நாதமும், பாரதி கீதமும் அவரது ஆத்மாவுக்கு சாந்தியளிக்கும்.

# மாக்ஸ்வெல் புகழ்மாலை

## ஸர். மாக்ஸ்வெல்

[ஸ்ரீ சத்தியமூர்த்தியின் கேள்வி பாணங்களை தாங்கும் பெரும் பொறுப்பு ஹோம் மெம்பராக இருந்த ஸர். மாக்ஸ்வெல்லுடையது தான். அவர் என்ன சொல்லுகிறார் பாருங்கள்.]

*"ஸ்ரீ சத்தியமூர்த்தி நாட்டின் வாழ்க்கையில் ஒரு முக்கிய புருஷராயிருந்தார். சென்னை மேயராக அவர் திறம்பட வேலை செய்திருக்கிறார். மத்திய சட்டசபையில் அவரது பார்லிமெண்டு திறமையைக் கண்டவர்கள் என்றும் மறக்க முடியாது. ஸ்ரீ சத்தியமூர்த்தி தன் கடமையை செய்வதில் தவறியது கிடையாது." கேள்வி நேரத்தில் அவர் காட்டும் திறமையும், உத்ஸாகத்தையும், மறக்கவே முடியாது. அவருடன் விவாதத்திற்கு நிற்பவர்களும் அவரை புகழாமலிருக்க முடியாது.*

---

## தியோபால்டின் அனுபவம்

[சில ஐரோப்பியர்களுடன் ஸ்ரீ. சத்தியமூர்த்திக்கு நெருங்கிய நட்பு. தேச நலத்திற்கு பாதகமாக அந்த நண்பர்கள் பேசினால் ஸ்ரீ. சத்தியமூர்த்தி அவர்களை லேசில் விடமாட்டார். சென்னை நகர சபையில் ஸ்ரீ தியோ

பால்டும் அவர் வாய்ச் சோல்லம்புக்கு ஆளான
துண்டு.]

“இந்தியா உயர்ந்த நிலைமையடைய வேண்டுமெனறே அவர் விரும்பினுர். தேசத்தை பிரிக்கும் யோசனையை அவர் ஆதரிக்கவில்லை. ஐக்ய மடைந்த நாட்டையே அடைய அவர் ஆசைப் பட்டார்.

சிறைச்சாலை வாசத்திற்கு அவர் தேகநிலை உகந்த தல்ல. நான் அவரை ‘காங்கிரஸிலிருந்து விலகி நின்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்’ என்று ஒரு சமயம் சொன்னேன். ‘எந்த ஆங்கிலேயனுவது அவ்விதம் செய்வானு?’ என்று என்னைக் கேட்டார். எங்கள் சமூகத்தாரிடம் அவருக்கு வெறுப்பு கிடையாது. எல்லாரையும் சமமாக பாவிப்பதே அவர் நோக்கம்.”


## கதரையே வாங்குங்கள்

கதருக்காக நீங்கள் கொடுக்கும் பணத்தினுல் அநேக ஏழைகளின் குடும்பங்கள் பிழைக்கின்றன.

விளம்பரம் செய்தவர் :

**பாரதி காதி நிலையம்**

கபாலி சன்னதி தெரு, மயிலாப்பூர்.